# இயேசுவே வாரும்

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி. 22:20

*காலேப் யோசுவா*
☎ 044 - 26490183 Cell :9444701953
*4/130, காந்தி தெரு, சென்னீர்குப்பம்,*
*பூந்தமல்லி, சென்னை - 600 056.*

## *ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே.* *(மத்.10:36)*

## *A Man's foes shall be they of his own house hold*

1. தேவனுடைய சித்தத்தினாலே கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காக கர்த்தரால் சுவிஷேகனாக ஏற்படுத்தப்பட்டவனாகிய காலேப் யோசுவா : கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களுமாய் இருகிற தேவனுடைய சபைக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுதுக்கொள்கிற அனைவருக்கும் எழுதுகிறதாவது : நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக

2. மேற்கண்ட தலைப்பின் வசனத்தை நாம் வேதவாக்கியங்களில் தியானிக்கும் போது கீழ்கண்டவாறு மேலும் வாசிக்கிறோம். உங்கள் தலையில் உள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது என 30 வது வசனம் கூறுகிறது. **உங்கள்** இது யாரை குறிக்கிறது? தென்னிந்தியத் திருச்சபை, தி பெந்தெகொஸ்தே சபை, அசெம்பிளி ஆப் காட், இந்திய சுவிஷேச திருச்சபை போன்று நம் மத்தியில் உள்ள ஆயிரக்கணக்கான ஸ்தாபன சபைகளில் அவயவமாக / மெம்பராக உள்ளவர்களையா? இல்லவே இல்லை. அப்படியானால் பின் அது யாரை குறிக்கிறது? என் நாமத்தின் நிமித்தம் நீங்கள் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள் என்று 22 ம் வசனத்தில் கூறப்பட்டிருகிறவர்களையே. அப்படியானால் ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே என்று கூறும் போது, அந்த மனுஷன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னும் நாமத்தின் நிமித்தம் அவன் வீட்டார் அனைவராலும் பகைப்படவேண்டும். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை வரும்போது **பயப்படாதிருங்கள்** என்ற வாக்குத்தத்தத்தின் மூலம் தேவன் அவர்களை ஆறுதல் படுத்துகிறார். வசனம் 31. **தேவனுடைய வாக்குத்தத்தங்கள்** எல்லாம் இயேசு கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறது. 2 கொரி. 1:20

3. இன்னும் கவனியுங்கள். **உங்கள்** என்று கூறப்பட்டிருப்பவர்கள் மனுஷர் முன்பாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தை அறிக்கை பண்ணுகிறவர்கள். **சத்துருகள் ஆகிய** அவன் வீட்டார் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தை மறுதலிக்கிறவர்களாய் இருப்பார்கள். **தியானியுங்கள்** வசனங்கள் 32 & 33. இது நிமித்தமாக மகனுக்கும் தகப்பனுக்கும், மகளுக்கும் தாய்க்கும், மருமகளுக்கும் மாமிக்கும் கர்த்தர் பிரிவினை உண்டாக்குகிறார்

4. ஆக கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தின் நிமித்தம், அந்த நாமத்தை அசட்டை பண்ணி, தேவனை அசட்டை பண்ணி, தேவனுடைய வார்த்தையை அசட்டை பண்ணி, அதை விட ஒருவன் தன் தகப்பனையாவது, தாயையாவது, மகளையாவது, மகனையாவது அதிகமாக நேசித்தால் அவன் கர்த்தருக்கு பாத்திரவான் அல்ல. கர்த்தருக்கு பிரியமானவன் அல்ல. தேவனுடைய குமாரனும் குமாரத்தியும் அல்ல. கிறிஸ்துவினுடைய மணவாட்டியும் அல்ல. கிறிஸ்துவினுடையவன் / வள் அல்ல. அதாவது அவர்கள் பேர் கிறிஸ்தவ மக்கள்.

5. அதாவது ஒருவன் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாது தன் தகப்பனையும், தாயையும், மகளையும், மகனையும் பிரியப்படுத்த விரும்புகிறவனானால், தன் பாரம்பரித்தை ஆதரிக்கிறவனானால், தன் சமூதாயத்தை பிரியப்படுத்துகிறவனானால், தன் குடும்பத்தாரை நேசிக்கிறவனானால் அவன் கர்த்தருக்கு உகந்தவன் அல்ல. அவருக்கு பிரியமானவன் அல்ல. அவருக்கு பாத்திரவான் அல்ல.

6. கர்த்தருடைய நாமத்தை மறுதலியாமல் அறிக்கை பண்ணுகிறவன் கர்த்தருடைய வசனத்தை கைக்கொள்கிறான் (வெளி. 3:8) பாருங்கள், **கர்த்தருடைய நாமத்தை அறிக்கை பண்ணுதல், கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிதல் ஆகும்.** இயேசுவின் நாமத்தை குறித்து எவ்வளவும் பேசவும், போதிக்கவும் கூடாதென்று ஆசாரியர்களும் தேவாலயத்தின் சேனைத்தலைவனும், சதுசேயரும் அப்போஸ்தலர்களுக்கு கட்டளையிட்டார்கள். பேதுருவும், யோவானும் அவர்களுக்கு பிரதியுத்தரமாக தேவனுக்கு செவிக்கொடுக்கிறதைப் பார்க்கிலும் உங்களுக்கு செவிக்கொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாய் இருக்குமோ? நாங்கள் கண்டவைகளையும், கேட்டவைகளையும் பேசாமல் இருக்க கூடாது என்றார்கள். இதுதான் கர்த்தருடைய நாமத்தை மனுஷர்களுக்கு முன்பாக அறிக்கை செய்தல். தியானியுங்கள் அப். 4:18-20 அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, தேவவசனத்தை தைரியமாய் சொன்னார்கள். கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர் தம்முடைய வசனத்தை முழு தைரியத்தோடு சொல்லும்படிக்கு அவர்களுக்கு அநுக்கிரகம் செய்தார். அப். 4:30-31 அப்போஸ்தலர்கள் மனுஷர்களுக்கு செவிக்கொடுக்கிறதை பார்க்கிலும் தேவனுக்கு செவிக்கொடுப்பதையே முற்றிலும் விரும்பினார்கள். அதாவது தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதையே விரும்பினார்கள். அது நிமித்தம் தங்கள் சுய ஜனங்கலால் பகைக்கப்பட்டார்கள். என் ஓட்டத்தை சந்தோஷத்தோடே முடிக்கவும், நான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடத்தில்

பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன் என்று பவுல் கூறுகிறான். அப். 20:24

7. மற்றொரு சம்பவத்தை கவனியுங்கள். பிரதான ஆசாரியன் அப்போஸ்தலர்களை பார்த்து நீங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தை குறித்து போதகம் பண்ணக்கூடாது என்று நாங்கள் உங்களுக்கு உறுதியாய் கட்டளையிட்டிருக்க, நீங்கள் உங்கள் போதகத்தால் எருசலேமை நிரப்புகிறீர்களே என்றான். அதற்கு அப்போஸ்தலர்கள் மனுஷருக்கு கீழ்ப்படிகிறதை பார்க்கிலும் தேவனுக்கு கீழ்ப்படுகிறதே அவசியம் என்றார்கள். **இதுதான் கர்த்தருடைய நாமத்தை மனுஷர்கள் முன்பாக அறிக்கை செய்தல்.** தியானியுங்கள் அப். 5:27-29. பாருங்கள் அப்போஸ்தலர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தின் நிமித்தம் ஆசாரியர்களின் வெறுப்புக்கு ஆளானார்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தை உண்மையாய் தரித்துக்கொண்டவர்கள்தான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்திற்காக, தேவனுடைய வார்த்தைக்காக ஜீவிக்க முடியும். ஸ்தாபன சபைகளை சார்ந்த பேர் கிறிஸ்தவர்களால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திற்காக வைராக்கியமாக ஜீவிக்க முடியாது. ஏனென்றால் அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தை தரித்துக்கொள்ளவில்லை. அவர்கள் C.S.I., T.P.M., E.C.I. கிறிஸ்தவர்கள் என்ற பெயரையே தரித்துள்ளார்கள்

8. பழைய ஏற்பாடு காலத்திலும் உள்ள சில உதாரணங்களை இங்கு நாம் தியானிக்கலாம். 1 இராஜா. 22 அதிக்கு திரும்புங்கள். மிகாயாவை அழைக்கப்போன ஆள் அவனுடனே பேசி : இதோ, தீர்க்கதரிசிகளுடைய வார்த்தைகள் ஏகவாக்கை ராஜாவுக்கு நன்மையாக இருக்கிறது. உம்முடைய வார்த்தையும் அவர்களில் ஒருவர் வார்த்தையைப்போல இருக்கும்படி நன்மையானதை சொல்லும் என்றான். அதற்கு மிகாயா : கர்த்தர் என்னிடத்தில் சொல்லுவதையே சொல்வேன் என்று கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்கிறேன் என்றான். வசனங்கள் 13 & 14. பாருங்கள் மிகாயா யாருடனும் ஒத்துப்போக விரும்பவில்லை. கர்த்தருடைய வார்த்தை எதுவோ அதிலே நிலைத்திருக்க விரும்பினான். கர்த்தருடைய வார்த்தையோடு அவன் இசைந்துப்போக விரும்பினான். மனுஷர்களை பிரிப்படுத்த அவன் விரும்பவில்லை. ராஜாவை பிரியப்படுத்த அவன் விரும்பவில்லை. இதர சகதீர்க்கதரிசிகளையும் அவன் பிரியப்படுத்த விரும்பவில்லை. தேவனை, தேவனுடைய வார்த்தையை மட்டுமே சார்ந்திருக்க அவன் விரும்பினான். இது நிமித்தம் அவன் சக ஊழியர்களாலும், ராஜாவாலும் பகைப்பட்டான்.

9. சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்னும் யூத புருஷர்களை பாருங்கள். நேபுகாத்நேச்சார் நிறுத்தின பொற்சிலையை பணிந்துக்கொள்ள அவர்கள் மறுத்தார்கள். இதனால் ராஜா உக்கிர கோபங்கொண்டான். ராஜா என் கைக்கு உங்களை தப்பவிக்கப்போகிற தேவன் யார் என்றான். யூத புருஷர்கள் இந்த காரியத்தை குறித்து உமக்கு உத்தரவு சொல்ல எங்களுக்கு அவசியம் இல்லை. நாங்கள் ஆராதிக்கிற தேவன் எங்களை தப்புவிக்க வல்லவராய் இருக்கிறார். அவர் எரிகிற அக்கினி சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார். நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை, நீர் நிறுத்தின பொற்சிலையை பணிந்துக்கொள்வதும் இல்லை என்கிறது ராஜாவாகிய உமக்கு தெரிந்திருக்கக்கடவது என்றார்கள். பாருங்கள், ராஜாவின் அரண்மனையிலே இருந்துக்கொண்டு, பாபிலோன் மாகாணத்து காரியங்களை விசாரிக்கும் அதிகாரிகளாகவும் இருந்துக்கொண்டு ராஜாவின் கட்டளை தேவனுடைய பிரமாணத்திற்கு எதிராக இருந்ததால் அதற்கு கீழ்ப்படிய யூத புருஷர்கள் மறுத்தார்கள். பாருங்கள் யாத்திராகமம் 20 ம் அதி 4 - 5 வசனங்கள் கீழ்கண்டவாறு கூறுகிறது : மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொருபத்தையாகிலும், யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம். நீ அவைகளை நமஸ்கரிக்கவும், சேவிக்கவும் வேண்டாம். ஆம், அந்த யூத புருஷர்கள் தங்களை தேவனுடைய வார்த்தைக்கு ஒப்புக்கொடுத்தார்கள். ஆதலால் ராஜாவால் அவர்கள் பகைக்கப்பட்டார்கள்.

10. இது கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களுக்கும், அவருடைய பரிசுத்தவான்களுக்கும், தேவனுடைய மனிதர்களுக்கும் அடுத்த காரியம் மாத்திரம் அல்ல. இது கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அவயவங்களாய் இருக்கிறோம், கிறிஸ்து மணவாட்டி என்று கூறிக்கொள்ளும் ஒவ்வொரு நபருக்கும் அடுத்த காரியமாகவும் இருக்கிறது. ஆம், நாம் நம்முடையவர்களால் பகைப்பட வேண்டியவர்களாய் இருக்கிறோம். நம்முடைய சத்துரு நம் வீட்டாரே!

## எனக்கு சத்துருக்கள் என் வீட்டாரே

11. கடந்த செய்தி தொகுப்பில் ஆட்டுக்குட்டியின் திருமணம் குறித்து தேவனுடைய சபைக்கும், என்னுடைய உடன்பிறப்புகளுக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் தெரியப்படுத்தினேன். திருமண விருந்தில் வந்து கலந்துக்கொண்டகள் அனைவருக்கும் என் நன்றியை கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் தெரிவித்துக்கொள்கிறேன். இக்காலத்திற்குரிய செய்தியில் இருக்கிறோம், நாங்கள் கிறிஸ்துவின் மணவாட்டி என மார்புத்தட்டிக்கொள்ளும் அநேகரால் நான் முழுவதும் மறக்கப்பட்டேன். எனக்கு நேரிட்ட தீமைகள் யாவையும் கேள்விப்பட்ட போதும் கூட எனக்காக பரிதவிக்கிறவர்கள் இல்லை. எனக்காக ஆறுதல் சொல்லுகிறவர்கள் ஒருவரும் இல்லை. ஆனாலும் அபாண்டம் பேசுகிறவர்களுக்கு மாத்திரம் குறைவு இல்லை. இவர்களது புரளிகளை கேட்டுக் கேட்டு என் மனம் கரைந்துப்போயிற்று. ஆனால் தேவன் என் பட்சத்தில் இருக்கிறார் என்பதை மாத்திரம் அறிந்துக்கொள்ள என்னால் முடிந்தது. கர்த்தருடைய கிருபையினால் திருமண ஆராதனை ஆசீர்வாதமாக இருந்தது. திருமண விருந்தும் விஷேசமாக இல்லாவிட்டாலும் குறை கூறும் அளவிற்கு இல்லையென அதை ருசிபார்த்தவர்கள் கூறினார்கள். திருமணத்தின் சம்பவங்களை எழுத வேண்டாம் என நினைத்தேன். ஆனாலும் பலர்

பல விதமாக பேசுவதை கேள்விப்பட்டேன். ஆதாலால் அனைத்து சம்பவங்களையும் தேவனுடைய சபைக்கும் மற்றும் உறவினர்களுக்கும் தெரியப்படுத்த கடமைப் பட்டிருக்கிறேன். இதற்கு மிஞ்சி யாரும் எதும் புரளிகளை கிளப்புவார்களானால் அது முற்றிலும் பொய், தவறான செய்தி, வதந்தி என நினைத்துக்கொள்ளுங்கள். நான் என்னுடைய மகன் திருமணம் குறித்து உங்களுக்கு எதுவும் மறைத்து வைக்க விரும்பவில்லை.

அ) சென்னை, அனகாபுத்தூரிலிருந்து ஒரு சகோதரன் ஆகஸ்ட் கடைசி வாரம் என்னுடைய வீட்டிற்கு வந்தார். நான் பெண் வீட்டார் எனக்கு 100 பவுன் கொடுக்காவிட்டால் பையனை பெண்ணுக்கு தாலி கட்ட விடமாட்டேன் என ரகளை பண்ணியதாக அந்த பகுதிகளில் சகோதரர்கள் பேசிக்கொள்வதாக கூறினார்.

ஆ) திரு. டேனியேல் பாலசிங், (எனது மூத்த சகோதரரின் இளைய மகன், திரு. ஆசேர் அவர்களின் மூத்த மருமகன், திருமதி. எமிலியின் கணவர், எனது மருமகளின் அத்தான்) திருமண கோலத்தில் திருமணமண்டப மேடையில் நின்ற எனது மகன் (திரு. ஜாண்பால்) திருமண விருந்து முடியும் தருவாயில் தன்னிடம் சென்று சாப்பிட்டிற்கு அழைத்த தன் மாமனார் திரு. ஆசேர் அவர்களை திட்டி, கைகளினால் அடிக்க முயற்சித்தாகவும், கால்களால் மிதிக்கச் சென்றதாகவும் ஆதனால் தான் பெரிய ரகளை திருமண விருந்து முடியும் தருவாயில் ஏற்பட்டது எனவும்.

இ) கலவரத்தின் போது தன் பிள்ளைகள், மற்றும் கணவனின் பாதுகாப்புக்கு மேடைக்கு வந்த எனது மனைவி திருமதி. எப்சிபா கமலம் மீது என் இளைய மகன் திரு. இம்மானுவேல் ஒன்டர்புல் விழுந்து, இருவரும் மேடையிலிருந்து கீழே விழுந்ததினால் தான் எனது மனைவியின் வலது கால் மூட்டுக்கு கீழ் எலும்பு முறிவு ஏற்பட்டது எனவும் எனது சகோதரியிடமும் (சென்னை) எனது மூத்த சகோதரர் குடும்பத்தினரிடமும் (திருச்சி) கூறியதாக அவர்கள் என்னிடம் கூறினார்கள்.

ஈ) திருமண விருந்தின் முடிவு நேரத்தில் ஏற்பட்ட இந்த பெரிய கலவரத்தில் தனக்கும், தன் குடும்பத்தினருக்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை. இது முற்றிலுமாக எனது மருமகளின் தாயார் திருமதி. அன்னத்தாய் அவர்களின் சகோதரிகளின் பிள்ளைகளால் ஏற்பட்டது. அவர்கள் தான் இந்த கலவரத்திற்கு காரணம் என எனது மூத்த சகோதரர் திரு. சுகிர்தராஜ், அவரை விட என் மூத்த சகோதரர் திரு. ஜெபராஜ் (தூத்துக்குடி) அவர்களிடம் கூறியதாக அவர் என்னிடம் கூறினார்.

உ) திருமண விருந்து செலவு அனைத்தும் பெண் வீட்டார் செய்ததினால், அவர்கள் தங்கள் விருப்பு, வெறுப்பு படி நடந்துக்கொள்ள அவர்களுக்கு அதிகாரம் உண்டு எனவும், அதினால் அங்கு பெண்களுக்கு தலையில் சூடிக்கொள்ள வைக்கப்பட்ட பூச்சரங்களுக்காக நான் பிரச்சனை தொடக்கத்தில் கிளப்பியது நியாயத்திற்கு புறம்பானது என திரு. டேனியேல் பாலசிங் என் திருச்சி குடும்பத்தாரிடம் பேசியதாகவும், அவர்கள் என்னிடம் அது குறித்து விளக்கம் ஏதும் கேட்காமல் அவர் கூறியது சரி என அமோதிப்பதாகவும் கூறினார்கள்.

ஊ) திரு. ஆசேர் சமரசத்திற்காக 27 ம் தேதி அதிகாலை 1.00 மணியளவில் பலர் திருமண மண்டபம் முன்பு கூடியிருக்கையில் நான் பெண்ணுக்கு 80 பவுன் கொடுப்பதாக கூறவே இல்லை எனக் கூறினார். மேலும் ரூ. 1,50,000/- கொடுப்பதாக மட்டுமே கூறினேன். அதை என்னிடம் கொடுத்துவிட்டேன் என கூறினார். அது எந்த அளவிற்கு உண்மை?

எ) திருமதி. எமிலி திரு ஆசேர் அவர்களின் மூத்த மகள், எனது அப்பா ஒன்றும் (நகை) கொடுக்கமாட்டேன் என கூறவில்லை, எனக்கு கொடுத்தது போல் என் சகோதரிக்கும் கொடுப்பார்கள் என ஆகஸ்ட் முதல் வாரத்தில் காட்பாடி பாஸ்டரை அவர் இல்லத்தில் சந்தித்து தன் தகப்பனார் கூறியதற்கு மாறாக அவரிடம் பேசியதாக என்னிடம் கூறினார்.

ஏ) நான் பெஸ்தெகொஸ்தே காரன் என கூறிக்கொண்டு, 11 பவுனுக்கு தன் மருமகளுக்கு தாலி பண்ணி போடவேண்டும் என கூறியது எந்த வகையில் நியாயம் என திரு. ஆசேர் திருமணத்தினன்று பலர் மத்தியில் புலம்பியதாக நமது கேரள சகோதரர் என்னிடம் கூறினார். அப்படியானால் 9 பவுன் போடுவது நியாயமோ? தாலிக்கொடியில் இத்தனை பவுன் தான் போடவேண்டும் என நியாயம், அநியாயத்திற்கு ஒரு வரம்பு உண்டோ? நான் பன்னிரெண்டு பவுனில் அல்லவா போடவேண்டும் என கூறினேன்.

12. இவ்வாறாக அநேகர் சொல்லும் அவதூறுகளையும், புரளிகளையும் நான் கேட்டேன். பலவிதமான வார்த்தைகள் இந்த திருமணம் குறித்து பேசப்பட்டு வருவதால் நான் இது குறித்து ஒரு விளக்கம் கொடுக்க கடமைப்பட்டிருக்கிறேன். எனக்கடுத்த காரியங்களும், என் சுகநல செய்திகளும் தேவனுடைய சபைக்கும், உறவினர்களுக்கும் தெரியவேண்டியதே. என் வலது கை இதை உங்களுக்கு எழுதுவதில் என் இருதயம் மிக்க பூரித்திருக்கிறது.

13. இங்கு நான் அறிந்து, விசுவாசித்து, போதித்துவரும் வேதவாக்கியங்களின் அடிப்படையில் உள்ள உபதேசங்களை கடைப்பிடிப்பதினால், என் வாழ்கையில் அவ்வப்போது ஏற்படும் பாடுகளையும் பிரச்சனைகளையும் இன்னல்களையும், இக்கட்டுகளையும், துன்பங்களையும் துயரங்களையும், கஷ்டங்களையும் நஷ்டங்களையும், வருத்தங்களையும் நெருக்கங்களையும், சஞ்சலங்களையும், உபத்திரவங்களையும் உங்களோடு இங்கு பகிர்ந்துக்கொள்ள விரும்புகிறேன்.

14. என்னுடைய மேற்கூறிய அனுபவங்கள் குறித்து வேத வாக்கியங்கள் கீழ்கண்டவாறு கூறுகிறது. அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாய் இருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள். 2 தீமோ. 3:12 பாருங்கள் தேவபக்தியாய் நடக்க மனதாய் இருக்கிற ஒரு சிலர் அல்ல மாறாக அனைவரும் துன்பப்படுவார்கள் எனக் கூறப்பட்டுள்ளது. அப்படியானால் கிறிஸ்தவ வாழ்கையே மேற்கூறிய அனுபவங்களுக்குள் கடந்து செல்லும் ஒரு சாட்சியான வாழ்க்கை தான்.

15. இவர்கள் யாரால் துன்பப்படுவார்கள்? பாருங்கள் ஒரு மனுஷனுக்கு சத்துருக்கள் அவன் வீட்டாரே. மத். 10:36 அவன் வீட்டார் என்று சொல்லப்பட்டிருக்கும் போது அது அவனுடைய குடும்பத்தாராக இருக்கலாம் அவனுடைய இனஜனபந்துக்களாக இருக்கலாம். அவனுடைய சுய ஜனங்களாக இருக்கலாம். அது மேலும் அவனோடு ஐக்கியம் கொண்டுள்ள கள்ளச் சகோதரர்களாகவும் இருக்கலாம். உன்னை சோதித்து, நிருபித்து, நீ ஆபிரகாமின் வித்து என்பதை காண்பிக்கவே கர்த்தர் உன் மேல் வியாதிகளை அனுமதிக்கிறார். உன்மேல் ஆபத்துக்கள் வர அனுமதிக்கிறார். உன் நண்பர்கள், உறவினர்கள், குடும்பத்தினர் உனக்கு விரோதமாக எழும்ப அனுமதிக்கிறார்.

16. அப்படியானால் மேற்கூறிய அனுபவங்களுக்கு பரிகாரம் என்ன? ஒருவன் கிறிஸ்தவனாய் இருப்பதினால் (பேர் கிறிஸ்தவனாய் இருப்பதினால் அல்ல. பேர் கிறிஸ்தவர்கள் யார்? ஸ்தாபன சபைகளை சேர்ந்து, அவைகளை சேவித்து தாங்கள் கிறிஸ்தவர்கள் என அழைத்துக்கொள்பவர்கள். தங்கள் பாவமன்னிப்புகென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெறாது, பிதாகுமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்று, கிறிஸ்துவுக்கு புறம்பாக ஒரு வாழ்க்கை வாழ்ந்து வருபவர்களே பேர் கிறிஸ்தவர்கள்) உண்மையும் உத்தமுமான ஒரு விசுவாசியாக இருப்பதினால் பாடுபட்டாலும், வெட்கம் அடையாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமை படுத்தக்கடவன் (1 பேதுரு 1 :16) மேலும் தியானியுங்கள் நாம் உபத்திரவங்களினால் தான் பூரணப்பட முடியும். (எபி2:10). ஆம் அநேக உபத்திரவங்களின் வழியாய் தான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமுடியும் (அப் 14:22). அப்படியானால் கிறிஸ்தவ வாழ்க்கையே நான் மேற்கூறிய அனுபவங்களுக்குறியது தான். சுகபோகமாக வாழ்வது கிறிஸ்தவ வாழ்க்கையல்ல. சுகபோகமாய் வாழ்கிறவள் உயிரோடே செத்தவள் (1 தீமோ. 5:6) அவள் மாத்திரம் அல்ல அவனும் தான். ஆம் பாடுபட விரும்பாதவன், பாடுபட்டவருக்கு ஏற்றவனாக, உரியவனாக, ஒரு பாத்திரமாக இருக்க முடியாது.

17. என்னுடைய வாழ்க்கையில் மேற்குறிய அனுபவங்களுக்கு எடுத்துக்காட்டாக, கடந்த 2008, ஜுலை மாதம் 26ம் தேதி வேலூரில் நடந்த எனது மூத்த மகன் திருமணக்காரியங்களை எடுத்துக்கொண்டேன். இதில் சம்மத்தப்பட்ட சில முக்கிய கதாப்பாத்திரங்கள் :

| | | |
|---|---|---|
| அ) சகோ. காலேப் யோசுவா | : | மணமகனின் தந்தை |
| ஆ) சகோ. ஜாண் பால் 1 | : | மணமகன் |
| இ) சகோதரி. எப்சிபாகமலம் | : | மணமகனின் தாய் |
| ஈ) சகோ. இம்மானுவேல் ஒன்டர்புல் | : | மணமகனின் தம்பி |
| உ) திரு. இம்மானுவேல் ரத்தினராஜ் ஆசேர் | : | மணமகளின் தந்தை |
| ஊ) சகோதரி. கிறிஸ்லி மிடியா | : | மணமகள் |
| எ) திருமதி. அன்னத்தாய் | : | மணமகளின் தாய் |
| ஏ) திருமதி. எமிலி | : | மணமகளின் மூத்த சகோதரி |
| ஐ) திரு. டேனியேல் பாலசிங் | : | திருமதி. எமிலியின் கணவர் |
| ஒ) திரு. சுகிர்தராஜ் | : | சகோ. காலேப் யோசுவாவின் மூத்த சகோதரர்<br>திரு. டேனியேல் பாலசிங்கின் தந்தை<br>திரு. ஆசேர் அவர்களின் முதல் சம்பந்தி |

18. கர்த்தருடைய மாபெரும் கிருபையினால், வழி நடத்துதலின் படி 2008, ஜீலை மாதம், 26ந் தேதி எனது மூத்த மகன் ஜாண்பாலின் திருமணம் வேலூரில் நடைபெற்றது. அன்று கலை சுமார் 10.30 மணியளவில் ஆவியானவருடைய வழி நடத்துதலின்படி எனது வாடகை வீட்டிலிருந்து சென்னை, மதனந்தபுரம் மூத்த சகோதரர் ஈசாக் அவர்கள் ஜெபிக்க, கர்த்தருடைய சமூகம் எங்கள் முன் செல்ல, நாங்கள் (என் குடும்பத்தினர், உறவினர்கள், விசுவாசத்தில் உடன் உள்ள சகோதர சகோதரிகள்) இரு வேன்களில் புறப்பட்டு சென்றோம். எங்கள் பிறகே எங்கள் பிரயாணத்தில் கர்த்தர் எங்களை காக்கிறவராக இருந்தார். மதியம் சுமார் 1.00 மணியளவில் வேலூர், GVRS ராதா வில்வம் திருமண மஹால் வந்தடைந்தோம். அங்கு மணமகனையும் அவரது பரிவாரங்களையும் வரவேற்க மேளத்தாளத்துடன் கீத வாத்தியங்களை வாசித்து பாடுவோர் மற்றும் மனமகிழ்ச்சி ஆரவார சத்தத்தின் மத்தியில், சந்தோஷமாக திரு. ஆசேர் தம்பதி மற்றும் அவரது உறவினர்கள் சூழ, களிப்புள்ள ஒரு கூட்டத்தார் ஆனந்தத்தில் கெம்பீரித்து எங்களை வரவேற்க நின்றுக்கொண்டிருப்பார்கள் என்ற எதிர்பார்ப்புடன் எங்களை ஏற்றிக் கொண்டு வந்த இரு வேன்களும் திருமண மஹால் முகப்பில் வந்து நின்றது. ஆனால் எங்கள் எதிர்பார்பிற்கு மாறாக, அங்கு எங்களை வரவேற்க ஒரு நாதியும் இல்லை. திருமண மண்டபம் வெறிச்சோடிக்கிடந்தது உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? நிச்சயதார்த்தம் அன்று கூட எங்களை வழிவிட்டனுப்ப ஒரு நாதியும் கிடையாது என்பதை முன்பே உங்களுக்கு எழுதியுள்ளேன். அந்த வேளையில் நான் திகைத்து நின்றேன். திரு ஆசேர் அவர்களின் இருதயத்தின் வஞ்சகத்தை என்னால் அந்த வேளையில் உணர முடிந்தது.

19. நாங்கள் பேசி முடிவு எடுத்த பிரகாரம், திரு. ஆசேர் மணமகனுக்கு 2 பவுனில் ஒரு மைனர் செயின் அணிவித்து, அவர்கள் வழக்கத்தின்படி வரவேற்க விரும்பினார்கள். ஆனால் நானோ மணமகன் திரு. ஆசேர் அவர்கள் அணிவிக்கப்போகும் மைனர் செயினை அணிந்துக்கொள்ள மாட்டார். மாறாக அதை ஒரு அன்பளிப்பாக

ஏற்றுக்கொள்வார் என கூறினேன். அது சரியென இருதரப்பாரும் ஒத்துக்கொண்டோம். காரியம் இப்படியிருக்க, அங்கு எங்களை வரவேற்க பெண் வீட்டார் யாரும் இல்லாதது ஒரு பெருத்த அவமானமாகவும், அது ஒரு தாங்கிக்கொள்ள முடியாத நிந்தையாகவும் அந்த நேரத்தில் எனக்கு இருந்தது. என் இருதயம் துவண்டு போயிற்று. பெண் வீட்டார் தொடக்கம் முதல் சொல் ஒன்றும் செயல் ஒன்றுமாக இருந்துக்கொண்டு என்னை பதம் பார்த்து, பல சோதனைகளுக்குட்படுத்தி வருவதை என் உள்ளத்தில் உணர்தேன். திரு. ஆசேர் தன் வாயினால் என்னிடத்தில் இன்பமாய் பேசி தன் இருதயத்தில் எனக்கு தூரம் சென்று, என்னை வஞ்சித்துவருவதை கண்டு என் இருதயம் எனக்குள் திகைத்தது. திருமணம் உறுதி செய்யப்பட்ட நாள் முதல் திரு. ஆசேர் தன் பாதையை கோணலாக்கிக்கொண்டார். அவருடைய இனிய வார்த்தைகளால் நான் மோசம் போனேன்.

20. அந்த மனமகிழ்ச்சியற்ற வேளையில் நான் ஒரு பேர் கிறிஸ்தவனாக, ஒரு உலகத்தானாக இருந்திருப்பேனானால், எனது பரிவாரங்களுடன் அந்த நிமிடமே சென்னைக்கு திரும்பி இருப்பேன். ஆனால் கிறிஸ்துவுக்காக நான் கட்டப்பட்டிருப்பதால் என்னுடைய வியாகுலத்தை என் ஆறுதலாகிய கர்த்தரிடத்தில் ஒப்புக்கொடுத்துவிட்டு; இதர, இனி நடக்கவேண்டிய காரியங்களை கவனிக்கலானேன்.

21. மனநிம்மதியற்ற நிலையில், திருமண மஹாலில் திரு. ஆசேர் எங்களுக்காக ஒதுக்கி வைத்திருந்த அறைகளுக்கு நாங்கள் சென்றோம். அங்கு திரு. டேனியேல் பால்சிங் எங்களை சந்தித்தார். நாங்கள் தங்க நான்கு அறைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன என கூறி சாவிகளை கொடுத்தார். நாங்களோ, எங்களுடன் வந்தவர்கள் மற்றும் வெளிஊர்களிலிருந்து வந்திருப்பர்கள் அனைவரும் தங்க இவைகள் போதாது, இன்னும் சில அறைகளை ஒதுக்கித் தாருங்கள் என கேட்டோம். உடனே அந்த நல்ல மனிதர், இந்த நான்கு அறைகளில் தங்க முடியுமானால் தங்கிக்கொள்ளுங்கள். மேலும் தேவைபடுமாயில் வேறு எங்காவது சென்று உங்கள் சொந்த ஏற்பாடுகளை செய்துக்கொள்ளுங்கள் என காரசாரமாக, ஒரு சுருக்கமான வெறுப்பூட்டும் சொற்பொழிவை ஆற்றி சென்றார். பாருங்கள் ஒரு பெண் வீட்டார், ஒரு மாப்பிள்ளை வீட்டாருக்கு கொடுக்கும் மதிப்பையும், மரியாதையையும்? நானும் பொறுமைக்கு மேல் பொறுமையை கடைபிடித்துக்கொண்டே என் தேவனுக்குள் என்னை திடப்படுத்திக்கொண்டு சென்றேன். நாங்கள் வேலூர் வந்து சேர்ந்தது முதல் பலவழிகளில் அசட்டை பண்ண படுவதை கண்டேன். எல்லாம் ஒரு முன்னேற்பாடுகளுடன் நடக்கிறது எனவும் புரிந்துக்கொண்டேன்.

22. திரு. ஆசேர் சர்ப்பத்தைப்போன்று மிக்க தந்திரமாக செயல்படுவதை என் உள்ளத்தில் உணர முடிந்தது. நிச்சயததார்த்தத்திற்கு முன்பே என் பையனை தன் மகளோடு பல மணிநேரங்கள் பேச அவர்களுக்கு வாய்ப்புகளை உருவாக்கிக்கொடுத்தார். அவர்கள் இருவரும் மனம் பொருந்திவிட்டனர். தங்கள் இல்லற வாழ்க்கை குறித்து கனவுகள் காண ஆரம்பித்தனர். பையனும் பெண்ணும் ஒருவருக்கொருவர் திருமண வாக்கு பரிமாரிக்கொண்டனர். திருமண வாக்கு ஆண் பெண் ஒருவருக்கொருவர் பரிமாரிக்கொண்ட பிறகு, எக்காரணம் கொண்டும் அந்த திருமணத்தை நிறுத்தக் கூடாது. அதைக் காத்துக்கொள்ள வேண்டும். அது தான் நான் அறிந்து போதிக்கும் உபதேசம். ஆதலால் தான் நிச்சயதார்த்தம் அன்று நான் நிச்சயதார்த்தத்தை நிறுத்தி வைக்க நினைத்தும் என்னால் முடியாமல் போயிற்று. ஏனென்றால் நான் போதிக்கும் உபதேசத்திற்கு நான் சாட்சியாக வாழ வேண்டியதாயிருந்தது.

23. பாருங்கள் நான் விசுவாசித்து போதிக்கும் உபதேசம் இக்காலத்திற்குறிய செய்தியில் கீழ்கண்டவாறு உள்ளது. **இங்கு நான் நின்றுக்கொண்டு ஒரு பெண்ணுக்கு வாக்களித்த என் சொந்த மகன் இங்கு உட்கார்த்திருக்கையில் நான் உண்மையை கூறாமல் போனால் ஒரு மாய்மாலக்காரனாக இருப்பேன். நான் சொன்னேன் .... அவனுக்கு அந்த திருமண வைபவம் நடந்திராமல் போனாலும், அவன் அந்த ஸ்திரீயுடன் வாழ்ந்து, அவளுடன் உறங்கி, அவன் என்ன செய்திருந்தாலும், அவன் அவளுக்கு வாக்களித்தபோது, அவளை மணந்துக்கொண்டான் அது பில்லி பாலாக இருந்தாலும், வேறு யாராக இருந்தாலும் அது முற்றிலும் உண்மை அவன் வாக்களித்தபோதே அவளை மணந்துக்கொண்டான். அது நானாயிருந்தாலும். அதுவே தான். (கே.ப. 342 பத்தி 165)**

24. இந்த செய்தியின் அடிப்படையில் தான் நான் நடந்துக்கொண்டேன். Sacred promises cannot be broken. நிச்சயதார்த்தத்திற்கு முன்பே என் பையனையும் தன் பெண்ணையும் தந்திரமாக பழக விட்டுவிட்டார் ஆதாலால் தான் நிச்சயதார்த்தத்தில் விரும்பப்படாத காரியங்கள் நடந்தாலும் நான் நிச்சயதார்த்தத்தை நிறுத்தாமல் அதை நடத்திவைக்க நிர்பந்தப்படுத்தப்பட்டேன். இப்பொழுதும் திருமணத்தை நடத்திவைக்கவேண்டிய நிர்பந்ததிற்குள்ளானேன்.

25. ஆக, திரு. டேனியேல் பாலசிங் தன் மீசையை முறுக்க, என் மகன் பெண் வீட்டாரோடு தொடர்புக் கொள்ள, திரு ஆசேர் அவர்கள் வந்தார்கள். மேலும் 3 அறைகள் நாங்கள் தங்க ஏற்பாடுகள் செய்துக்கொடுத்தார்கள். அத்துடன் எங்களை மதிய உணவுக்கு அழைத்தார்கள். நானோ நிம்மதியற்ற நிலையில் சாப்பாட்டுக்கு முன் உட்கார்ந்து பசியை ஆற்ற கொஞ்சம் புசித்தேன். எப்படியோ மதிய உணவு சிலருக்கு திருப்த்தியாகவும், சிலருக்கு அதிருப்பதியாகவும் முடிந்தது. பின் அனைவரும் சற்று இளைப்பாற சென்றனர்.

26. நானோ திருமண ஆராதனை நடக்கவிருக்கும் சபைக்கு சென்று, அங்கு செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளை கவனித்துவர இருந்தேன். சபை பாஸ்டரோ மதியம் 2.30 மணிக்கு பாடல் குழு (ஆராதனை வேளையில் பாடல் குழுவைவிட சபையார் நன்றாக பாடுவதை அறிந்து அந்த இடத்தில் பாடல் குழுவை கண்டிக்க நேர்ந்தது) திருமண மண்டபம் வரஇருக்கிறது. நீங்கள் அவர்களை உங்கள் வேனில் ஏற்றிக்கொண்டு சபைக்கு வந்து ஏற்பாடுகளை

கவனித்துச் செல்லுங்கள் என்றார். மேலும் என்னை உடனே அங்கு அழைத்துவர, திருமண மஹாலுக்கு அனுப்ப அவரிடம் ஆட்கள் யாரும் இல்லை என்றார். நான் பாடல் குழுவுக்காக காத்துக்கொண்டிருந்தேன், காத்துக்கொண்டேஇருந்தேன். முடிவில் 3.30 மணிக்கு பாடல் குழு வந்தது. அந்த வேளையில் பெண் திருமண மண்டபத்திற்கு அலங்காரத்திற்காக வந்துவிட்டார்கள் என்ற தகவல் எனக்கு கிடைத்தது. ஆதலால் பாடல்குழுவை மட்டும் வேனில் சபைக்கு அனுப்பிவிட்டு, பெண்ணுக்கடுத்த காரியங்களை கவனிக்க என்னை நிறுத்திக்கொண்டேன்.

27. கடந்த 20 ஆண்டுகளுக்குமேல் என்னோடு விசுவாசத்தில் உடன் ஐக்கியப்பட்டு, நட்பை காத்துக்கொண்டுவரும் கேளர மாநிலத்து சகோதரர் விக்டர் லாசர் அவர்கள் ஜெபிக்க, நாங்கள் பெண்ணுக்கு கொடுக்க வேண்டிய சீர்வரிசைகளை கொடுத்தோம். மணியும் 4.00 ஆகி விட்டது.

28. இதன் பின் நாங்கள் சபைக்கு புறப்பட ஆயத்தம் ஆனோம். நீண்ட காலமாக என்னுடன் ஐக்கியத்ததை விட்டுவிடாது காத்து வரும் சென்னை, மனபாக்கம் சகோ. விஜயகுமார் அவர்கள் ஜெபிக்க, நாங்கள் சபைக்கு புறப்பட்டு சென்றோம். மணமகனுடன் நாங்கள் சபை வந்தடைந்தோம். எங்களுக்கு பின் மணமகளின் பரிவாரம் வந்தடைந்தது. எனது மூத்த சகோதரர் திரு. சுகிர்தராஜ் குடும்பத்தினர் வேலூரில் பெண் வீட்டிலேயே ஒரு வாரமாக தங்கியிருந்தும் திருமண ஆராதனையில் வந்து கலந்துக்கொள்ளவில்லை. பெண்ணின் அக்கா திருமதி. எமிலியும் அவரது கணவரும் ஆராதனையில் வந்து கலந்துக்கொள்ளவில்லை அவர்கள் கர்த்தரால் தடை செய்யப்பட்டிருந்தார்கள் சாத்தான் கட்டப்பட்டிருந்தான்.

29. ஆராதனை சற்று கால தாமதத்துடன் ஆரம்பமானது. நான் பரிசுத்த விவாக ஆராதனையை நடத்தினேன். யாரோ ஒருவர் கழுத்தில் தாலி ஏறட்டும், பின் பார்த்துக் கொள்ளலாம் என முறுமுறுத்ததாக, சபை விசுவாசிகளில் ஒருவர் பாஸ்டரிடம் கூறியதாக பாஸ்டர் என்னிடம் பின் நாட்களில் ஒரு நாள் கூறினார். ஒரு சிலர் சபைக்குள் வந்து திருமண ஆராதனையில் கலந்துக்கொள்ளாமல், ஜன்னல் பக்கமாக நின்றுக்கொன்று அங்கும் இங்கும் உலவிக்கொண்டு சந்தேக பேர்வழியாக இருந்துவந்தார்கள் எனவும் பாஸ்டர் என்னிடம் திருமணத்தன்று இரவு கூறினார்.

30. என் குடும்பத்திலும், மணமகள் குடும்பத்திலும் பலர் திருமண ஆராதனையில் வந்து கலந்துக்கொள்ளாவிட்டாலும், திருமண ஆராதனை கர்த்தருடைய கிருபையினால் அநேகருக்கு ஆசீர்வாதமாக இருந்தது என சாட்சி பகிர்ந்தனர். ஆராதனை முடிந்தவுடன் சில ஊழியர்கள் என்னிடம் வந்து ஆராதனை முறைமை நகலை தங்களுக்கு தரும்படி கேட்டுக்கொண்டனர். ஏனென்றால் ஆராதனை முறைமையில் கிறிஸ்துவின் சுவிஷேசமும், இக்காலத்திற்குறிய செய்தியும் அடங்கியிருந்தது அவர்கள் ஆத்துமாவுக்கு பிரியோஜனமாக இருந்தது என்று சாட்சி கூறினர். என் கரங்களில் எட்டு நகல்கள் வைத்திருந்தேன். அனைத்தையும் அவர்கள் பெற்றுச் சென்றனர்.

31. ஆனாலும் திருமண ஆராதனை ஒரு ஆராதனையா? என்னுடைய போதனைகள் யாவும் கள்ள உபதேசங்கள். ஆதலால் தான் நாங்கள் திருமண ஆராதனைக்கு வரவில்லையென திருமணம் முடிந்தபின், சிலநாட்கள் கழித்து பாஸ்டரை சந்தித்து திருமதி. எமிலி கூறினார்களாம். என்னை போல் கள்ள உபதேசத்தை கொண்டு வருபவர்களுக்கு நீங்கள் எப்படி உங்கள் சபையை திருமண ஆராதனைக்கு கொடுத்தீர்கள் என கூறி பாஸ்டரை கடிந்தும்க் கொண்டார்களாம் அந்த தேவ பக்தியுள்ள ஸ்திரீ.

32 பாருங்கள் இந்த அம்மா கூறியிருக்கிறார்கள் என்னுடைய போதனைகள் யாவும் கள்ள உபதேசங்கள். ஆனால் இந்த அம்மையார் குடும்பத்தினர் மாய்மாலத்தை, வஞ்சகத்தை, ஏமாற்றும் தந்திரங்களை கவனியுங்கள். திருமணத்தில் ஏமாற்றும் இப்படியொரு பேர் கிறிஸ்தவ குடும்பத்தை நான் இதுவரை கண்டதில்லை. இனி காண்பதும் இல்லை. இவர்களுக்கு நான் என் விசுவாசத்தை எனது மகன் MATRIMONIAL SYNOPSIS ல் மிக்க தெளிவாக கொடுத்திருக்கிறேன். அதன் நகலை இங்கு கீழே தருகிறேன்.

1. We Believe : One God ad Father of all, who is above all (as Father), and through all (as Son, Jesus), and in you all (as Holy Spirit). Read (Eph. 4 :6) yes, Jesus Christ, the same yesterday, and today, and forever. (Heb.13:8) Now, Christ is all, and in all. (Col 3:11.) For in Christ dwelleth all the Fullness of God head bodily. (Col. 3 : 11). See, not one third of god head but fullness of god head in Christ. We preach Christ Jesus the Lord. (2 Cor. 4:5) Know ye that the LORD, He is God. (Psa. 100 :3) So we believe that one God is : LORD JESUS CHRIST. The name of the Father, and of the Son, and of the Holy Spirit is LORD JESUS CHRIST. (Mt. 28:19) Hence the apostles of Christ baptized the believers in the Name of Lord Jesus Christ. (Acts 2:38)

2. We don't believe in Trinity because it is :
   a. Not mentioned in the Bible.
   b. Not written in the Bible.
   c. Not taught in the Bible.
   d. It divides the God head into three. But Ex. 20:2 says I am the LORD thy God, See, I am in single. The Lord our God is one Lord. Mk. 12:30. For there is one God, and there is no other but he. Mk. 12:32 Is there a God beside me? yea, there is no God; I know not any. (Isa 44:8) I am God, and there is none else (Isa. 45:22, 46:9)

e. It is a doctrine against one God faith
f. It is a man made scheme.
g. Trinitarianism is of the Devil.
h. Trinity worship is Paganism.
i. Trinity worship is Heathenism.

We believe Trinitarians are Christians. But they are sincerely wrong.

3. We Believe : All your denominational churches are the Mark of the Beast. (Rev. 13.18) Hence we are not a denomination. And truly our fellowship is with the Father, and with his Son, Jesus Christ. (1 Jn. 1:3) God works in trinity but God is not in trinity.

**If you are a co - believer withus, you may have fellowship with us. Otherwise let us be friends.**

God bless you.

NOTE : 1. The Girl should be baptized in the name LORD JESUS CHRIST for the remission of her sins and to receive the gift of the Holy Spirit. (Acts 2 : 28)
2. Teach the young women to be keepers at home that the word of God be not blasphemed (Ti. 2:5 & Eph 5:29)
3. No other Ornaments except Marriage Token "Thaali". (I Pet. 3:3-5 & Lk.15:8-10)

33. வேதவாக்கியங்களின் அடிப்படையில் உள்ள இந்த விசுவாசத்தில் என்னோடு இவர்கள் ஒருமனப்பட்டு திருமண உடன்பாட்டிற்கு இசைந்து வந்தால் OK மற்றபடி No என திட்டவட்டமாக கூறியுள்ளேன். இந்த அம்மா ஒரு முதுநிலை பட்டதாரி தானே? CMC Nursing College ல் Deputy Register என்று தன்னை அழைத்துக்கொள்கிறார்கள். நான் எழுதிய என்னுடைய எளிய நடைமுறை ஆங்கிலம் இவர்களுக்கு புரியவில்லையா? புரிந்துதான் பெண் கொடுக்க முன்வந்தார்களா? அல்லது புரிந்து மாய்மாலம் பண்ணி தன் தங்கையின் கழுத்தில் என் பையனை தாலி கட்ட வைத்தார்களா? புரிந்த பின் பெண் கொடுக்க முன் வந்தால் பின் ஏன் என் போதனைகள் யாவும் கள்ள உபதேசம் என்று கூறுகிறார்கள்? இந்த பெண்மணியின் காரியங்கள் யாவும் சுத்த மாய்மாலமே என்பதை உங்களால் உணர முடிகிறதா? ஒரு கட்டத்தில் என் மகள், என்னை பார்த்து போயும் போயும் இந்த குடும்பத்தில் தான் பெண் எடுத்தாயோ என கூறியபோது, எங்கள் குடும்பம் படித்தக்குடும்பம் அல்லவா என இந்த அம்மா ஆனவமாய் பேசினார்கள். படித்தவர்கள் லட்சணம் தானா இந்த திருமண காரியத்தில் நீங்கள் நடந்துக்கொண்ட முறை? நீங்களும் எனக்கு மருமகள் தான். அதற்காக நான் வருந்துகிறேன். உங்கள் நடத்தைகளை சீர்தூக்கிப்பார்த்து மனந்திரும்புகள். அப்பொழுது தேவனுடைய கண்களில் உங்களுக்கும் தயவும் இரக்கமும் கிடைக்கும்.

34. உங்கள் விசுவாசத்தை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். கர்த்தருக்கு சித்தமானால் நாங்கள் குடும்பமாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் எடுக்க இருக்கிறோம் என கூறி பின் திருமண ஒப்பந்தம் ஏற்பட்டவுடன், தங்கள் பாதைகளை கோணலாக்கி கொண்டார்கள். வேதவாக்கியங்களில் காணப்படாத ஒரு ஞானஸ்நானத்தை எடுத்துக்கொண்டார்கள் பெண்ணை மட்டும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற விட்டுவிட்டார்கள். பின் அதுவும் மணப்பெண் கட்டாயத்தின் பேரில் அந்த ஞானஸ்நானம் எடுத்தாள் என தூற்றினார்கள். இந்த குடும்பத்தில் ஒவ்வொருவரும் கள்ள வார்த்தைகளை கர்ப்பதரித்து, அதை தங்கள் இருதயத்திலிருந்து பிறப்பிக்கிறார்கள். சேனைகளின் கர்த்தருடைய வேதத்தை வெறுத்து, பரிசுத்தருடைய வசனத்தை அசட்டை பண்ணினார்கள்.

35 மேலும் திருமதி. எமிலி நான் கள்ள உபதேசம் கொண்டுள்ளேன் என்று கூறியத்தில் ஒன்றும் தவறில்லை. ஏனெனில் சிலர் வேதவாக்கியங்களில் இடறுகிறார்கள். அதாவது திருவசனத்திற்கு கீழ்ப்படியாதவர்களாயிருந்து இடறுகிறார்கள் (1 பேது. 2:8) அதற்கென்றே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். நித்திய ஜீவனுக்கென்று நியமிக்கப்பட்டவர்கள் எவர்களே அவர்கள் வேதவாக்கியங்களை விசுவாசிக்கிறார்கள் என அப் 13 : 49 ல் காண்கிறோம். திருமதி எமிலி பாலசிங் தன் குடும்பத்தாருடன் திருவசனத்திற்கு கீழ்ப்படியாது இடறும்போது நான் என்ன செய்ய முடியும்? அவர்கள் தேவனால் இடறுகிறதற்கென்றே நியமிக்கப்பட்டவர்கள் என்று மட்டுமே கூற முடியும்.

36. திருமண ஆராதனைக்கு தனித்தனியாக காரில் வந்து இறங்கிய மணமகனும், மணமகளும் ஆராதனை முடிந்தவுடன் ஒரே காரில், ஒரே சரீரமாக திருமண விருந்துக்காக திருமண மஹாலுக்கு புறப்பட்டு சென்றனர். மணமகனையும் மணமகளையும் ஏற்றிக்கொண்டு வந்த கார் திருமண மஹால் வாசல் முகப்பில் வந்த நின்றது. அவர்களை வரவேற்க மணமகள் தந்தையோ, தாயோ, உறவினர்களோ யாரும் கிடையாது. மணமக்களை அழைத்துச்சென்று அவர்களுக்கு பானங்கள் ஏதாவது கொடுத்து, உபசரித்து, சற்று இளைப்பாறச் செய்து, பின் திருமண மஹாலுக்கு அவர்களுக்காக திரு. ஆசேர் ஏனோ தானோ என்று அலங்கரிக்கப்பட்ட மேடைக்கு அழைத்துவர மீண்டும் ஒரு நாதி கூட இல்லை. மணமக்கள் காரிலே தனிமையாக விடப்பட்டனர். என் பிள்ளைகள் அனதையாய் விடப்பட்டதை கண்டு என் இருதயம் காட்டிஉள்ள மரங்கள் காற்றிலே அசைவது போல அசைந்தது. அந்த நாள் எனக்கு நான் வேலூர் வந்து சேர்ந்தது முதல் ஒரு கலக்கமுள்ள நாளாகவே இருந்தது. நலமல்லாத வழியிலே

தங்கள் நினைவுகளின் படி நடக்கிற முரட்டாட்டமான மக்கள் குடும்பத்தில் பெண் எடுத்துவிட்டேனே என என் இருதயம் எனக்குள் கலங்கியது. எனது மூத்த சகோதரன் மகனின் மிகுதியான இனிய ஆனாலும் தந்திரமான சொற்களால் வசப்பட்டு அவர் உதடுகளின் மதுர, ஆனாலும் நயவஞ்சகமான வாக்கினால் அந்த குடும்பத்தில் பெண் எடுக்க இணங்கிவிட்டேனே என என் உள்ளத்தில் ஒரு பகுதியில் போராட்டம் நடந்துக்கொண்டிருந்தது. மறுபக்கமோ தோராகு ஒரு விக்கிரகாராதனைக்காரன். அவன் குடும்பத்திலிருந்து கர்த்தர் ஆபிராமை மாத்திரம் தெரிந்தெடுக்கவில்லையா? அதே போல் கிறிஸ்லியையும் தேவன் தெரிந்தெடுத்திருக்கும் போது அதற்கு எதிரிடையாக நிற்க நான் யார் என்ற சிந்தனை. நான் உங்களை ஊரில் ஒருவனும் வம்சத்தில் இரண்டு பேருமாக தெரிந்துக்கொண்டேன் (எரே. 3:14) என்று தேவன் கூறும் போது கிறிஸ்லி ஏன் அந்த இரண்டு பேரில் ஒருத்தியாக இருக்கக்கூடாது போன்ற எண்ணங்கள் என் உள்ளத்தில் எழும்ப, நான் அமைதியானேன். என் உள்ளத்தில் வீசிய புயலை கர்த்தர் அமைதிப்படுத்தினார்.

37. திருமண மஹாலின் மறுபக்கம் திரும்பினேன். அங்கு திருமண விருந்து நடைபெற்றுக்கொண்டிருந்தது. அது எனக்கு மற்றொரு அதிர்ச்சியாக இருந்தது. அதாவது மணமக்கள் திருமண மஹாலின் மேடைஏறும் முன்பே திருமண விருந்து நடைபெற்றுக்கொண்டிருந்தது. அது ஒரு அஞ்ஞான மக்கள் திருமணத்தில் கூட நடப்பது இல்லையே? மணமக்கள் மேடையேற அவர்களுக்காக ஜெபிக்க, அவர்களை வாழ்த்தி, அவர்கள் கேக் வெட்ட, பின் விருந்தினர்களை விருந்துக்கு அழைப்பது வழக்கம். ஆனால் இங்கு எல்லாம் எதிர்மாறாகவே நடந்துக்கொண்டிருந்தது. ஏனென்றால் சாத்தான் தன் இருப்பிடத்தை அங்கு கொண்டிருக்க கண்டேன். இந்த திருமண விருந்து திரு. ஆசேர் அவர்களின் ஒரு வசூல் வேட்டையாக மாறியிருப்பதை கண்டேன். ஆதலால் எனக்கு திருமண மஹால் உள்ளே செல்ல மனம் இல்லை. ஆனாலும் ஓரிரு ஊழியக்காரர்களை அழைத்து மேடைக்கு சென்று ஜெபித்து மணமக்களை ஆசீர்வதித்து வாருங்கள் என கேட்டுக்கொண்டேன். நானும் திருமண மஹால் படிக்கட்டுகளில் ஏறினேன்.

3.8 திருமண மஹால் முகப்பில் மீண்டும் ஒரு அதிர்ச்சி எனக்காக காத்திருந்தது. மஹால் முகப்பில் இடதுபுறம் ஒரு மேசைமீது ஒரு தட்டில் கற்கண்டுகளும். மற்றொரு தட்டில் மல்லிகை பூச்சரங்களும் வைக்கப்பட்டிருந்து. இந்த பூ மற்றும் வெற்றிலை பாக்கு போன்ற வஸ்துக்கள் குறித்து நிச்சயதார்த்தம் நேரத்தில் பிரச்சனை கிளம்பியது. திருமண விருந்தில் அப்படிப்பட்ட வஸ்துக்கள் எதுவும் காணப்படக்கூடாது என பெண் வீட்டாரை கேட்டுக்கொண்டேன். அவர்களும் ஒப்புக்கொண்டார்கள். அப்படியிருந்தும் மீண்டும் திருமண விருந்துக்கு வரும் பெண்கள் மல்லிகை பூச்சரங்கள் அணிந்து தங்களை அலங்கரித்துக்கொள்ள வைக்கப்பட்டிருப்பது அறிந்து துக்கப்பட்டேன். வீண் பிரச்சனைகளை உருவாக்கவே இவர்கள் மல்லிகை பூ சரங்களை இங்கு வைத்துள்ளார்கள் என உணர்ந்தேன். சாத்தானின் கிரியை திருமண மஹால் உள்ளே நுழைந்து விட்டதை கண்டேன். திருமண ஆராதனையில் கட்டப்பட்டிருந்த சாத்தான் இங்கு கட்டவிழ்க்கப்பட்டிருப்பதை கண்டேன். நான் அந்த பூ தட்டை எடுத்து மேஜை கீழே வைத்துவிட்டு, ஹாலுக்குள் நுழைந்தேன். இந்த சம்பவத்தை எதிர்பார்த்துக்கொண்டே இருந்த திரு. டேனியேல் பாலசிங் உடனே ஓடி வந்து, நீ பூ தட்டை அப்புறப்படுத்த யார் என்று என் மீது வந்து சாடினார். நான் அறிய என் மூத்த சகோதரருக்கு இளைய மகனாக பிறந்து, என் கண்முன் சக்கரையை காட்டிக்கொண்டு மோண்டுக்கொண்டு திரிந்த பையன்; சித்தப்பா, சித்தப்பா என அன்பு என் மீது பாராட்டி அழைக்கும் பையன், என் மனைவி வீட்டில் சாப்பிட்டு படுத்து உறங்கிய பொடியன் இன்று என்னை நோக்கி; நீ யார் என்கிறான். மேலும் அவனுக்கு ஆதராவாக பெண் வீட்டாரில் ஒருவர் என்னை அடிக்க வர, என்னுடைய விசுவாசத்தில் உடன் பங்காளிகளான என் சகோதரர்களில் சிலர் எனக்கு ஆதரவாக வர, நான் மணமக்களை மேடை ஏற விடாதபடி தடுக்க, பின் மல்லிகை பூ தட்டு அகற்றப்பட்டு மணமக்கள் மேடை ஏறினார்கள்.

39. முதலாவது என்னுடைய செயலை தடுக்க இந்த திரு. டேனியேல் பாலசிங் யார்? இவர் என் மூத்த சகோதரனின் மகனாக இருக்கலாம். திரு. ஆசேர் அவர்களின் மூத்த மருமகனாகவும் இருக்கலாம் ஆனால் என்னை தடுக்க இவர் யார்? இவருடைய தகுதி என்ன? நான் மணமகனின் தந்தை. இவரை விட திருமண விருந்தில் அதிக உரிமைக்கொண்டுள்ளவன். இது மணமகன் மற்றும் மணமகள் வீட்டார் இணைந்து நடத்தும் திருமண விருந்து. காரியம் இப்படியிருக்க என்னை தடுக்க வந்த திரு. டேனியேல், மற்றும் என்னோடு சண்டை போட வர அந்த நபர் யார்? இவர்களுக்கு என்ன உரிமை இருந்தது? திருமண விருந்தில் என்னைவிட இவர்கள் எதிலும் மேன்மையானவர்கள் அல்ல. என்னிடம் திரு. ஆசேர் வந்து எதுவும் முறையிடலாமே அன்றி மற்றபடி யாருக்கும் உரிமை இல்லையே, அதிகாரமும் கிடையாதே. இப்படியிருக்க திரு. டேனியேல் மற்ற அந்த நபரும் (அது பெண் வீட்டார் உறவினர் / நண்பர் யாரோ நான் அறியேன்) என்னை அடிக்க வந்தது முற்றிலும் தவறு, நியாயமற்றது. நியாயம் பின்னிட்டு அகன்றது. நீதி தூரமாய் நின்றது. பாருங்கள் நான் மணமகனின் தந்தை. திருமண விருந்தில் என் பார்வைக்கு நலமல்லாததாக காணபடும் எதையும் அகற்ற எனக்கு உரிமை உண்டு. திரு. ஆசேர் அவர்கள் இதில் தலையிடவே இல்லை. திரு. ஆசேர் தலையிடாத காரியத்தில் திரு. டேனியேல் தலையிட்டது அவருடைய திமிரு. திரு. ஆசேர் அவர்களுடைய உரிமையை அவரது மருமகன் எடுத்துக்கொள்ள முடியாது. திரு. டேனியேல் அவர்களும் அவரது வகையறாக்களும் பிரச்சனைகளை உண்டுபண்ணத்தானே திருமண ஆராதனைக்குவராமல் திருமண மஹாலுக்கு வந்தார்கள் பிரச்சனைகளை உருவாக்குவதினால் அவர்கள் தங்கள் திட்டங்கள் நிறைவேறும் என நினைத்தார்கள். ஆனால் முடிவோ அவர்கள் தோல்வியையே சந்தித்தார்கள் அவர்கள் திட்டத்தினால் திருமண மஹாலில் ஒரு கலவரமும் மற்றும் கொள்ளையும் நடந்ததேயன்றி திருமணத்தை நிறுத்தும் அவர்கள் திட்டம் நிறைவேறவில்லை.

40. முடிவாக பூ தட்டு அகற்றப்பட்டு மணமக்கள் மேடைக்கு சென்றார்கள். எங்கும் அமைதி நிலவியது. இங்கு ஒரு சம்பவத்தை எழுத விரும்புகிறேன். இந்த பிரச்சனை முடிந்தவுடன் அங்கு கூட்டமாக நின்ற பெண் வீட்டார் நடுவில் என் மூத்த சகோதரரின் மூத்த மகன் திரு. ராஜசிங் (திரு. டேனியேல் பாலசிங்கின் அண்ணன்) அவர்கள் எனது இளைய மகளிடம் உன் அப்பா இப்படி சின்ன சின்ன காரியங்களை ஏன் பெரிது படுத்துகிறார்? ஏன் இந்த மல்லிகை பூக்களுக்காக இவ்வலவு பெரிய ரகளையை உண்டாக்கினார் என்று கேட்க; அவள், அவர்கள் தான் முன்பே திருமண வைபவங்கள் எதிலும் பூக்கள் வைக்கப்பட கூடாது என்று வேண்டிக்கொள்ள நீங்களும் அதற்கு ஒப்புக்கொண்டீர்கள். பின் ஏன் இங்கு பூக்களை கொண்டு வைத்தீர்கள் என கேட்டிருக்கிறாள். உடனே திருமதி. எமிலி ஆமாம் உனக்கு ரொம்ப தெரியும், போ போ என கூறியிருக்கிறார்கள்.

41. இவர்களுக்கு பூ அற்ப்ப காரியமாய் தெரிகிறது. ஆனால் அது எனக்கோ ஒரு பெரிய காரியம். பாருங்கள் நான் விசுவாசிக்கும் இக்காலத்திற்குரிய செய்தி இந்த பூ குறித்து கீழ்கண்டவாறு கூறுகிறது. **உண்மையில் முன் காலத்து ஸ்திரீகள் தங்கள் தலை மயிரை பின்னாக இழுந்து அதைக்கட்டினார்கள். ஏறக்குறைய இன்று அவர்கள் போனி டெயில் (BONY TAIL) கட்டுவதைப்போல. அவர்கள் எல்லா இடங்களுக்கும் அவ்விதமாகவே சென்றனர். (அக்காலத்தில் பெண்கள்** நமது பெந்தெகொஸ்தே **சபை பெண்கள் தலை மயிரை பின்னாக இழுந்துக்கட்டி கொண்டை போட்டுக்கொள்வதை இங்கு தீர்க்கதரிசி குறிப்பிடுகிறார்) அவர்கள் அங்கிகளை உடுத்திக்கொண்டார்கள். ஆனால் ஒரு தெரு வேசியோ தன் தலை மயிரை தலையிலிருந்து பின்னி, அதை இப்படி சுற்றிவிட்டு தலையில் பூ வைத்துக்கொள்வது வழக்கம் - ஒருவிதமான வேசி. இன்றைக்கு நாம் ஒரு வேசியை காண்பது போல் அவள் உடுத்தும் விதம். (கே.ப. 251, பத்தி 176)** ஆம், அக்காலத்தில் ஒரு தெருவேசிதான் தன் தலை மயிரை பின்னி தன் தலையில் பூ வைத்துக்கொள்வது வழக்கம் என தீர்க்கதரிசி கூறுகிறார். நான் அதை என் முழு இருதயத்தோடு விசுவாசிக்கிறேன். ஆதலால் தான் நான் பெண்கள் தலையில் பூ வைத்துக்கொள்வதை விரும்புவது இல்லை. பெண்கள் தங்கள் தலையில் பூ வைத்துக்கொள்ள கூடாது என்பது என் உபதேசம். இந்த உபதேசத்தில் நான் ஒரு ஊழியக்காரன். காரியம் இப்படியிருக்க நான் எப்படி என் மகன் திருமண விருந்து வைபவத்தில் பெண்கள் தங்களை அலங்கரிக்கரித்துக் கொள்ள எப்படி பூ கொடுக்க முடியும்? நான் என் உபதேசத்திற்கு சாட்சியாகவே இருக்க விரும்புகிறேன். அதற்காகா வைராக்கியம் பாராட்டுகிறேன் அறிந்த சத்தியத்தை கைக்கொண்டு வருகிற நீதியுள்ள ஜாதியாக நான் இருக்க விரும்புகிறேன். ஆக பூ தட்டை மேஜையிலிருந்து எடுத்து அதை மேஜை அடியில் வைத்தது நான் அறிந்த சத்தியத்திற்காக கொண்ட வைராக்கியம் ஆகும் அது. ஆதலால் தான் அந்த பூ தட்டை என்னால் சகிக்க முடியவில்லை. என் ஆத்துமா வெறுக்கிற பூவை நான் அங்கு பார்த்தது எனக்கு வருத்தமாய் இருந்தது. பின் அது அகற்றப்பட்டது என் மனத்திற்கு நிம்மதியாய் இருந்தது.

**42. ஒரு பெண்ணின் அலங்காரம் குறிந்து வேத** வாக்கியங்கள் **கீழ்கண்டவாறு கூறுகிறது**

அ) தன் கண்களுக்கு மையிட்டு, தன் தலையை சிங்காரித்துக்கொண்டவள் யேசபேல் என்ற ஸ்திரீ. இவள் கர்த்தருடைய ஊழியகாரர்களை வேசிதனம் பண்ணவும், விக்கிரகங்களுக்கு படைத்தவைகளை புசிக்கவும் அவர்களுக்கு போதித்து அவர்களை வஞ்சித்தவள். அவள் மனந்திரும்பும்படி அவளுக்கு தவணைக் கொடுக்கப்பட்டது. ஆனால் தன் வேசி மார்கத்தை விட்டு மனந்திரும்ப அவளுக்கு மனவிருப்பம் இல்லை. தியானியுங்கள் 2 இராஜா. 9:30, வெளி2:20-21. பாருங்கள், யேசபேல் தன் தலையை சிங்காரித்தாள், அலங்கரித்தாள். அவள் ஒரு வேசி

ஆ) பொன் ஆபரணங்களால் சிங்காரிப்பதும், கண்களில் மையிட்டுக்கொள்வதும் வீணாய் அழகுப்படுத்துவதாகும் (எரே. 4 : 30). வெட்கங்கெட்ட வேசியின் கிரியைகள் (எசே. 16 : 30)

இ) ஸ்திரீகளும் மயிரை பின்னினுவதலினாவது, பொன்னினாலாவது, முத்துகளினாலாவது, விலையேறப்பெற்ற வஸ்திரங்கலினாலாவது தங்களை அலங்கரியாமல், தகுதியான வஸ்த்திரங்கலினாலும் நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும், தேவபக்தியுள்ளவர்கள் என்று சொல்லிக்கொள்கிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும் தங்களை அலங்கரிக்க வேண்டும். (1 தீமோ. 1 : 9-10)

ஈ) நம்முடைய அலங்காரம் நம்முடைய இரட்சிப்பாகும் சங். 149:4. சாந்தமும் அமைதலும் உள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே அலங்காரம் ஆகும். அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது. புறம்பான அலங்கரிப்பு பெண்களுக்கு அலங்கரிப்பு அல்ல. (1 பேது 3:3-4)

43. அடுத்து ஜுலை 26ந் தேதி இரவு அந்நியனுடைய வாய் அல்ல, திரு. ஆசேர் அவர்களின் வாயே நாங்கள் எங்கள் பெண்ணை பெஸ்தெகொஸ்தே அனுபவத்திற்குள் உள்ள குடும்பத்தில் கொடுத்துள்ளோம். ஆனால் நாங்கள் அந்த அனுபவத்திற்குள் இல்லை என கூறியது. நல்லது . நீங்கள் உங்கள் பெண்ணை பெந்தெகொஸ்தே அனுபவத்திற்குள் உள்ள ஒரு குடும்பத்தில் கொடுத்துவிட்டீர்கள் ஆதலால் திருமண காரியங்கள் யாவும் பெந்தெகோஸ்தே அனுபவத்தின்படியே நடந்து வருகிறது இப்படியிருக்க நிங்கள் பின் உங்கள் அஞ்ஞான மார்க்க நடைமுறைகளை உள்ளே திணிப்பது ஏன்? பெந்தெகொஸ்தோ அனுபவத்திற்குள் பெண் கொடுத்துவிட்டால் திருமணம், திருமண விருந்து போன்ற திருமணத்திற்கு அடுத்த காரியங்கள் யாவும் பெந்தெகொஸ்தே முறைபடி தானே நடக்கும்? பாருங்கள், உதாரணமாக : ஒரு இந்துப் பெண்ணை முஸ்லீம் மார்கத்தில் திருமணத்தின் போது கொடுக்கிறார்கள். அந்த திருமணம் யாவும் முஸ்லீம் மார்க்கத்தின் படிதானே நடக்கும்? திருமண விருந்தில் இந்து சம்பிரதாயத்தை / முறைமைகளை / சடங்காச்சாரங்களை திணிக்க முடியாதே. அப்படி திணித்தால் குழப்பம் தான் வரும். அது தானே

இங்கு நடந்தது. திரு.ஆசேர் அவர்களின் மூத்த மகள் தானே பிரச்சனைகளை கிளப்பினார்கள். அதற்காக தானே அவர்கள் திருமண மஹாலுக்குள் வந்தார்கள். திருமண ஆராதனைக்கு வராத குடும்பத்தினருக்கு திருமண விருந்தில் என்ன வேலை? விருந்துக்காக வந்தால் விருந்தை புசித்து விட்டு வெளியே சென்று விட வேண்டியது தானே.

44. பாருங்கள், சமீப நாட்களில் ஒரு சகோதரன் மும்பையிலிருந்து என்னை காண்பதற்கு என் வீட்டிற்கு வந்தார். எனது மகன் திருமண சம்பவ காரியங்களை அறிந்து மிக்க வருத்தப்பட்டார். பின் அவர் கூறியதாவது; நாங்கள் எங்கள் பெண்ணுக்கு ஒரு இந்து பையனை எங்களுடன் விசுவாசத்திற்குள் கொண்டு வந்து, அவனுக்கு முறைப்படி ஞானஸ்நானம் கொடுத்து, திருமணம் செய்து வைத்தோம். திருமணம் மற்றும் திருமணத்திற்கு அடுத்தக் காரியங்கள் யாவும் எங்கள் விசுவாசத்தின் படியே நடந்தது. பையன் வீட்டார் இதில் முற்றிலுமாக தலையிடவே இல்லை. அவர்கள் இந்து முறைமைகளை எங்களிடம் திணிக்கவில்லை. ஏனென்றால் பையன் வீட்டார் பெண் விசுவாசத்திற்கு அவனை ஒப்புக்கொடுத்துவிட்டார்கள். ஆதலால் திருமணம் நன்றாக நடந்து ஆசீர்வதமாக இருந்தது என்றார். பாருங்கள் அது தான் சரி. நாங்கள் படித்தவர்கள் என திரு. ஆசேர் குடும்பத்தினர் பெருமை பாராட்டுகிறார்கள். ஆனால் படிக்காத மக்களின் லட்சணம் அவர்களிடம் இல்லையே?

45. மேலும் திரு. ஆசேர் அவர்களின் மூத்த மருமகன் நாங்கள் பணம் இவ்வளவு செலவு செய்து இந்த திருமண விருந்தை ஏற்பாடு செய்தோம். இதில் தலையிட காலேப் யோசுவாவுக்கு என்ன உரிமை? இவர் ஐந்து பைசா செலவு செய்தாரா? நாங்கள் அனைத்த செலவுகளையும் செய்து எங்கள் விருப்பப்படி வைத்த பூதட்டை அகற்ற இவருக்கு என்ன உரிமை என திருச்சியிலுள்ள எனது மூத்த சகோதரர் லேட் திரு. ஜெபமணி அவர்களின் மூத்த மகன் திரு. ஜெசுபாலுக்கு திருமணம் முடிந்த பிறகு போன் மூலம் தெரிவித்திருக்கிறார். அவர் உடனே எனக்கு போன் செய்து நான் எப்படி அவர்களின் உரிமையில் தலையிடலாம் என வாதாடினார். தன் தந்தை குணாதியங்களை மகன் கொண்டிருக்கிறான் என்று எப்போதும் நான் பெருமையாக பேசும் திரு. ஜெசுபால் நான் செய்தது தவறு என ஒரு பக்கத்து சாட்சியை மட்டும் கேட்டு முடிவு எடுத்துவிட்டார். ஆனால் இவர்களுக்கு என்ன தெரியும்? இப்பொழுது நடந்தசம்பவத்தை இருவரும் கேளுங்கள் நம்முடைய சமூதாயத்தில் பெண் வீட்டார் தங்கள் சொத்தில் பங்கு எதுவும் பெண்களுக்கு கொடுப்பது இல்லை. சொத்தில் பங்கு ஆண்களுக்கு மட்டுமே கொடுப்பார்கள். சொத்துக்கு பதிலாக பெண்ணுக்கு திருமண வேளையில் அன்பளிப்பாக, ஆஸ்தியாக பொன் நகைகளை கொடுப்பார்கள், சிலர் வீடு கொடுப்பார்கள், சிலர் நிலம் கொடுப்பார்கள். ஆனால் வீட்டிலுள்ள ஆண்களோடு சரிசமமாக சொத்தை பகிர்ந்துக்கொடுப்பது வழக்கமல்ல. மேலும் பெண் திருமணம் என்றால் அங்கு ரொக்கமாக ஒரு தொகையை பையன் வீட்டாருக்கு கொடுப்பார்கள். பெண்களுக்கு நகைகளை அணிவித்து (அதில் இத்தனை பவுன்கள் என பேரம் பேசுவது உண்டு) பையன் வீட்டிற்கு அனுப்பிவைப்பார்கள். திருமண விருந்து செலவை பெண் மற்றும் பையன் வீட்டார் பகிர்ந்துக்கொள்வார்கள். பெண் வீட்டார் ரொக்கமாக கொடுக்கும் பணத்தை சில வசதியுள்ளவர்கள் அதை பெண் மற்றும் பையன் பேரில் இணைத்து வங்கியில் பொட்டுவிட்டு, திருமணத்தின் செலவுகளை குடும்பத்திலிருந்து செலவு செய்வார்கள். சிலர் பெண் வீட்டார் கொடுக்கும் ரொக்கத்தொகையிலிருந்து திருமண செலவுகளை செய்வார்கள். இது அவர் அவர்கள் பொருளாதார நிலையை பொருத்தது.

46. இந்த ரொக்கப்பணத்தில் பையன் வீட்டார் பெண்ணுக்கு நிச்சயதார்த்த சேலை, திருமண பட்டு, தாலி, மற்றும் திருமண விருந்தில் பாதி பாதி செலவு போன்றவைகளை கவனித்துக்கொள்வார்கள். பின் திருமணம் முடிந்தவுடன் பெண் குடும்பம் நடத்த அவளுக்கு தேவையான குடும்ப சாமான்கள் உதாரணமாக கட்டில், பீரோ, வாஸிங் மெஷின், மிக்ஸி, போன்றவைகளை தங்கள் தகுதிக்கு ஏற்றாற்போல் வாங்கிக்கொடுத்து பெண்ணை பையன் வீட்டிற்கு அனுப்பிவைப்பார்கள். மேலும் அத்துடன் இனிப்பு வகைகளையும் கொடுத்து அனுப்புவார்கள். அந்த இனிப்பு வகைகளை பையன் வீட்டார் அவர்கள் உற்றார் உறவினர்களுக்கு பகிர்ந்துக் கொடுப்பது வழக்கம். இது பொதுவாக கிறிஸ்தவ சமூதாயத்தில் எந்த சபைகளை சேர்ந்தவர்களாக இருந்தாலும் ஒரு பொதுவான சடங்கு மற்றும் வழக்கம். இப்பொழுது இந்த திருமண விஷயத்தில் நான் மாப்பிள்ளை வீட்டார் செலவு செய்ய வேண்டிய அனைத்து செலவுகளையும் (நிச்சயதார்த்த பட்டு, திருமண பட்டு, தாலி, திருமண விருந்து செலவு போன்றவைகள்) பெண் வீட்டாரே எனக்கு கொடுக்க இருக்கும் ரொக்கப்பணத்திலிருந்து செலவு செய்து விட்டு, மீதி எதுவும் எனக்கு சந்தோஷமாக, மனபூர்வமாக கொடுத்தால் போதும். அதில் எதுவும் டிமாண்ட் எதுவும் செய்யமாட்டேன் என கூறிவிட்டேன் முடிவாக பெண் வீட்டார் எனக்கு ரூபாய் . 1,50,000/- கொடுப்பதாக ஒப்புக்கொண்டு அதைக் கொடுக்கவும் செய்தார்கள். நல்லது.

47. ஆனால் இதன் பின் திரு. ஆசேர் என்னை ஒவ்வொரு சமயத்திலும் ஏமாற்ற ஆரம்பித்தார்கள். என் சகோதரர் திரு. சுகிர்தராஜ் ஆலோசனைகளின்படி என்னை மட்டம் தட்ட ஆராம்பித்தார்கள். தங்கள் உள்ளங்கால் தொடங்கி உச்சத்தலை மட்டும் பொய்யை தங்களுக்கு அடைக்கலமாக கொண்டார்கள். பாருங்கள், நிச்சயதார்த்தத்திற்கு சில நாட்களுக்கு முன்பு நான் சேலை எடுக்கச் செல்லவேண்டிய விபரம் குறித்து பேச திரு. ஆசேர் என்னிடம் நான் தான் என் சொந்த பணத்தில் சேலை எடுக்க வேண்டும் என்று கூறினார். சேலை செலக்ஷனுகாக பெண்ணை அனுப்பி வைக்கிறோம் என்று கூறிவிட்டார்கள். நான் இவர்கள் மாய்மாலத்தையும் வஞ்சகத்தையும் புரிந்துக்கொண்டேன். அடுத்து தாலிக்கொடி செய்யும் வேளை வரும்போது நீங்களே தாலிக்கொடி செய்துக் கொள்ளுங்கள் எனக் கூறினர். நானோ நாம் பேசிக்கொண்டபடி தாலிக் கொடி செய்வதற்கு தேவையாக தங்கம் நீங்கள் தரவேண்டும். என்றேன் அவர்கள் அப்படியானால் தாலிக்கொடி எங்கள் இஷ்டம் போல் செய்வோம் என கூறினர். நான் அதற்கு சம்மதிக்கவில்லை. முடிவில் நான் ஒரு பவுனில் தான் தாலிக் கொடி செய்துபோடுவேன் என கூறிய பின் அவர்கள் 12

பவுனுக்கு பதிலாக 9 பவுன் தங்கம் கொடுக்க முன்வந்தார்கள். ஏனென்றால் இளைய மகள் அணியும் தாலி மூத்த மகள் அணிந்துள்ள தாலிக்கொடியைவிட கூடுதலாக இருக்கக்கூடாது என்பதற்காக. அடுத்து திருமண பட்டு நேரம் வந்தது. அந்த செலவையும் நானே செய்துக்கொள்ள வேண்டும் என கூறினர். அவர்களோ நான் ஏமாளி என்று நினைத்துக்கொண்டார்கள். நானோ மிக்க பெருந்தன்மையாக நடந்துக்கொண்டே வந்தேன். அடுத்து திருமண விருந்து வந்தது. அதற்குரிய செலவுகள் எதையும் என்னிடம் கேட்கவில்லை. ஏனென்றால் அங்கு ஒரு கலவரத்தை உண்டாக்கி எனக்கு கொடுக்கவேண்டிய 71 பவுன் நகையை கொடுக்கவிடாமல் அதை தடுக்கவே காரியங்கள் இப்படியிருக்கும்போது திருமண விருந்து செலவை பெண் வீட்டாரே செய்தனர் என்று சொல்வது தவறானது. முறையாகாது. அவர்கள் செலவு செய்தாலும் என் பங்கு அதில் உள்ளதை என்பதை அவர்கள் மறுக்க முடியாது

48. அடுத்து திருமண தம்பதிகள் மேடைஏறியவுடன் எந்த விதமான ஒழுங்குமுறையின்றி, அதற்கு தகுந்த ஏற்பாடு இல்லாததால் விருந்தினர்கள் அன்பளிப்புகளை உடனே மேடை ஏறி கொடுக்க ஆரம்பத்துவிட்டனர் கர்த்தர் திருமணத்தை மிக்க ஆசீர்வாதமாக முடித்துக் கொடுத்ததற்கு திருமண விருந்தில் கர்த்தருக்கு துதி, நன்றி, ஸ்தோத்திரம் செலுத்தி ஜெபம் உட்பிரவேசிக்க கூடாதபடிக்கு, நாம் நம்முடைய கைகளோடும் கூட நம்முடைய இருதயத்தையும் பரலோகத்தில் இருக்கிற தேவனிடத்திற்கு ஏறெடுக்ககூடாதபடிக்கு சாத்தான் திரு. ஆசேர் மூலம் கிரியை செய்தான். திருமண மேடையில் ஒழுங்குமுறைகள் யாவும் ஒரு ஊழியக்காரன் வீட்டு திருமண வைபவம் மாதிரி இல்லாமல் ஒரு அஞ்ஞானியிலும் கேடுகெட்டவன் வீட்டு வைபவமாக காட்சி அளித்தது. அதற்கு திரு. ஆசேர் அவர்களே முழு பொறுப்பு. எனக்கோ அந்த திருமண மண்டபத்திற்குள் ஏன் என் மகனை அனுமதித்தேன் என்றாகிவிட்டது. திருமண விருந்து வசூல் வேட்டையாக மாறியது

49. விருந்திக்கு அழைக்கப்பட்டவர்கள் வருகை குறைந்து கொண்டே வந்தது. பிசாசு மீண்டும் தலைதூக்க ஆரம்பித்து விட்டான். அவன் வேளை வந்தது. திரு. ஆசேர் என்னிடம் வந்து நாங்கள் கொஞ்சம் இனிப்பு வகைகள் செய்து வைத்திருக்கிறோம். அதை நீங்கள் சென்னைக்கு எடுத்துசெல்லுங்கள் என்றார். அப்போது நான் நாங்கள் நாளை இரவு தான் சென்னை செல்ல இருக்கிறோம், அப்பொழுது மணமக்களும் எங்களுடன் வருவார்கள், அந்த வேளையில் நீங்கள் அவைகளை கொடுத்து அனுப்புகள் என்றேன். ஆனால் அவரோ அப்படியல்ல நீங்கள் நாளை செல்வதாக இருந்தால் உங்கள் வேன் இங்கு தானே நிற்கும், ஆதலால் அதில் கொண்டு வைத்துவிட நாங்கள் விரும்புகிறோம் என்றார். அவர் என்னை கோபத்திற்குள்ளாக முயற்சி செய்கிறார். சண்டைக்கு முகாந்திரம் தேடுகிறார். மூடனுக்கு அவன் மதியீனத்தின்படி மறுஉத்திரவு கொடு. அவ்வாறு கொடுக்காவிட்டால் அவன் தன் பார்வைக்கு ஞானியாய் இருப்பான் என வேதவாக்கியங்கள் கூறுகிறது. (நீதி 26 : 5) ஆதலால் நான் நீங்கள் உங்கள் இனிப்பு வகைகளை இங்கு என்னிடம் கொண்டு வந்து தரவேண்டாம் மேலும் வெளியே நிற்கும் எங்களது வாகனத்தில் கொண்டு வைக்கவும்வேண்டாம், நடுரோட்டில் கொண்டு வையுங்கள் என அவர் கேள்விக்கு ஏற்ற பதில் கொடுத்தேன். உடனே திருமதி. எமிலி, வாங்க அப்பா நாம் இங்கேயே கொண்டு வந்து வைத்துவிட்டு சென்று விடுவோம் என்று கூறி, மிடுக்காக இருவரும் சென்றுவிட்டார்கள்.

50 சற்று நேரம் கழிந்து ஒருவர் தண்ணீரில் மிதந்து என்னிடம் வந்தார். என்னிடம் வந்து உமக்கு தலையில் மயிர் நரைத்துவிட்டதேயன்றி எப்படி பேசவேண்டும் என தெரியவில்லை என நான் படிக்காதவன் போலும் அவர் மிக்கப்படித்தவர் போலும் பேசினார். நானோ திரு. ஆசேர் என்னிடம் பேசியதற்கு ஏற்ற பதிலை அவருக்கு கொடுத்தேன், நீங்கள் உங்கள் காரியங்களை சென்று கவனியுங்கள் என கூற, சற்று வாய் பேச்சுக்கு பின் அமைதல் உண்டானது.

51. அருமையான தேவனுடைய பிள்ளைகளில் சிலர் என்னிடம் வந்து; சகோதரரே உங்களிடம் அடக்கடி தகறாறுகள் ஏதாவது செய்து வம்பு பிரச்சனையை உண்டுபண்ண பெண் வீட்டார் முயற்சிக்கிறார்கள், ஆதலால் எதற்கும் உங்கள் பாதுகாப்புக்கு நாங்கள் வைபவம் முடிவுவரை இருந்து செல்கிறோம் என்றனர். நானோ அப்படி ஒன்றும் நடக்காது, நீங்கள் சந்தோஷமாக செல்லுங்கள், நாளை ஞாயிறு ஆராதனை இருக்கிறது என சொல்லி அனுப்பி வைத்தேன்.

52. பழையபடி திரு. ஆசேர் அவர்கள் என்னிடம் வந்து திருமண விருந்து முடியும் தருவாய்க்கு வந்து விட்டது, இதுவரை 900 பேருக்கு மேல் சாப்பிட்டிருக்கிறார்கள் நான் 10 சாப்பாடுகள் தனியாக வைத்திருக்க சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். ஆதலால் நீங்கள் சாப்பாட்டுக்கு வாருங்கள் என அழைத்தார். நானோ மணமக்களுடன் சாப்பாட்டிற்கு வருகிறேன் என கூற, அவர் சென்றுவிட்டார்.

53. பிள்ளை தன் தகப்பனிடம் அன்பு கூறுவதுபோல் என் மீது மிக்க பாசம் கொண்டுள்ள எனது KGF (Ex. Military Man) சகோதரனுடன் நான் பேசிக்கொண்டிருந்தேன். அந்த வேளையில் மேடையிலிருந்து வரும் வாய் தகறாறு சத்தம் என் காதில் விழுந்தது. நான் மேடையை நோக்கினேன். அங்கு சற்று நேரத்திற்கு முன்பு தண்ணீரில் மிதந்துக்கொண்டு என்னிடம் வந்தவர் மது பானத்தினால் மேற்கொள்ளப்பட்டு, தன் மதியை மறந்து, இழந்து அங்கு மணமகன் கோட்டை பிடித்து இழுத்துகொண்டு ஏதோ தகறாறு செய்வதை பார்த்தேன். இதை திரு. ஆசேர் மற்றும் திருமதி. எமிலி பார்த்துக்கொண்டு மரம் போன்று நின்ற இடத்திலே அசையாது நின்றுக்கொண்டு தன் மருமகனை தனது சவலப்பாடி அவமானப் படுத்துவதை பார்த்து ரசித்துக் கொண்டே இருந்தார். திருமதி. எமிலி தன் சித்தப்பாவின் நாடகத்தை பார்த்து ஆனந்த மகிழ்ச்சியில் மிதந்துக்கொண்டிருந்தார். திருமதி. கிறிஸ்லி தன் சித்தப்பாவை தட்டிக்கேட்கவில்லை. நானோ சம்பவத்தினால் அதிர்ச்சி அடைந்து மேடை ஏறி மணமகனிடமிருந்து அவரை பிரித்தேன். பின் அமைதி நிலவியது.

54. இந்த கட்டத்தில் எனது இரண்டாவது மகன் திருப்பூரில் இருந்து வந்த ஒரு பிரமாண குல ஆவிக்குரிய சகோதரிக்கு சைவ சாப்பாடு வாங்க வெளியே சென்றிருந்தான். எனது மூத்த மகன் அதாவது மணமகன் தன்னிடமிருந்த செல்லில் மேடையில் குழப்பம் நீ எங்கிருந்தாலும் உடனே வா என்று அழைப்பு கொடுத்திருக்கிறான். சாப்பாடு வாங்க சென்ற அவன் நடுவழியிலே திரும்பி மேடைக்கு வந்து ஏறினான். உடனே அவனுடைய வருகைக்காக எதிர்ப்பார்த்துக்கொண்டிருந்த ஒரு கூட்டம் மேடை ஏறி அவனை சுற்றி வளைத்து தாக்க ஆரம்பித்தார்கள். மணமகன், தன் தம்பி பாதுகாப்புக்கு இறங்கினான் இதை பார்த்துக்கொண்டிருந்த நான் என் பிள்ளைகளின் பாதுகாப்புக்கு மேடை ஏறினேன். நானும் எனது இரு பையன்களும் ஒரு புறம். எங்களை சுற்றி மறுபுறம் சுமார் 15 பேர்கள் இருக்கும். ஏன் அந்த கூட்டத்தாருக்கு என் இளைய மகன் மீது அத்தனை வெறுப்பு? ஏன் அவனை அடிக்க ஆரம்பித்தனர்? அவன் மீது தான் பெண் வீட்டாருக்கும் திரு. டேனியேல் பாலசிங்கிற்கும் கடுப்பு. ஆதலால் தான் திட்டமிட்டு அவனை தாக்கினார்கள். தனது பிள்ளைகளும் கணவனும் பெண் வீட்டாரால் தாங்கப்படுவதை பார்த்த எனது மனைவி மேடை ஏறினார்கள். அவர்களை ஒருவன் கீழே தள்ள அவர்கள் மேடையிலிருந்து கீழே விழுந்து, வலது முழங்கால் கீழ் எலும்பு முறிவுபட்டு, நடக்கமுடியாத நிலையில் தரையில் அனாதையாக கிடக்க, கலவரம் மேடையிலிருந்து கீழே வந்து மும்முறமாக, நாற்காலிகள் பறக்க, திரு. ஆசேரின் மூத்த மருமகன் அங்கு தோன்றி தனது மனைவியையும் கொழுந்தியாளையும் பார்த்து: நீங்கள் இருவரும் மாமாவை கவனித்துக்கொள்ளுங்கள், நான் இதர காரியங்களை பார்த்துக்கொள்கிறேன் என்று கூறி, தனது ஆட்களை பார்த்து என்னை நோக்கி இவர் ஒரு இருதய நோயாளி இவரை முதலில் சரிகட்டுங்கள், பிள்ளைகள் இருவரும் அடங்கி விடுவார்கள் என உத்திரவு போட்டு சென்றார். அன்று அன்பின் நிமித்தமாக சித்தப்பாவின் செருப்புகளுக்கு பாலிஸ் போட்டுக் கொடுப்பான். இன்று அவருனுடைய பார்வையில் சித்தப்பா மரண ஆக்கினைக்கு பாத்திரவானாக காணப்பட்டதேனோ?

55. திரு. டேனியேல் பாலசிங்கிற்கு தன் சித்தப்பா மீது இல்லாத பாசம் நேற்று வந்த தன் மாமனார் மீது வந்தது என்ன? மாதம் ரூ. 2,000/- சம்பளம் வாங்கிக்கொண்டிருந்தவனுக்கு திரு. ஆசேர் தன் மூத்த மகளை கொடுத்து, திருமணத்தை மிகவும் ஆடம்பரமாக நடத்தி, ரூ. 5,000/- வேலூர் தென்னிந்திய திருச்சபையில் வேலை வாங்கிக்கொடுத்தார். பின் தான் வேலை செய்யும் லெப்பர்சி மிஷனில் நல்ல சம்பளத்தில் ஒரு வேலை சென்னையில் வாங்கிக்கொடுத்தார். இந்த லெப்பர்சி மிஷன் முற்றிலுமாக வெளிநாட்டிலிருந்து வரும் பண உதவிகளினால் இயங்கிவரும் ஒரு ஸ்தாபனம். லெப்பர்சி வியாதிக்காக வருடச்செலவு ஐம்பது லட்சம் என்றால், அங்கு பணிபுரியும் உத்தியோகஸ்தர்களுக்கு செலவு ஐந்து கோடியாகும் இப்படியாக லெப்பர்சி மிஷன் பணி தீவிரமாக இந்தியாவில் நடைபெற்று வருகிறது இங்கு வேலையில்லாமல் ஒவ்வொருவரும் சம்பளம் பிரதிமாதம் 10,20,30 ஆயிரம் என வாங்கிக்கொண்டு ஒரு ஜாலியான வாழ்க்கை வாழ்ந்து வருகிறார்கள் என திரு. டேனியலே ஒரு முறை என்னிடம் கூறினார் ஆக மாமனார் பெயரில் நல்ல உத்தியோகம். நல்ல வீடு. நிம்மதியான வாழ்க்கை. இவ்வளவு சுபபோகம் வாழ்க்கையில் இருக்கும்போது அதைக்கொடுத்த மாமனாரை எப்படி மறக்கமுடியும். ஆனால் ஒன்று இன்றைய நிலையில் அவர் வெளியே சென்றாரானால் இவருக்கு பிரதி மாதம் ரூ.5,000/- கூட சம்பளம் கொடுக்க யாரும் முன் வருவார்களா என்பது சந்தேகமே? ஆதலால் இவர் மாமனாருக்கு நன்றியுள்ள மருமகனாக இருந்து வருகிறார். நல்லது. இது தான் காரியம்.

**56 ஒரு மனைவி தன் இரு பிள்ளைகளும், கணவனும் தாக்கப்படுவதை கண்டு, தன் பலவீனத்திலும் கூட்டத்துக்குள் நுழைந்து அவர்களை காப்பாற்ற முயற்சிக்கிறாள். அதன் பலனாக கால் முறிந்து அநாதையாக கீழே எழும்ப முடியாமல் கிடக்கிறாள். ஒரு நாள் அவள் பேரப்பிள்ளைகள் எழும்பி, பாட்டி பாட்டி உங்கள் முழங்காலில் இந்த நீளமான வடு ஏதென்று கேட்பார்கள். அவளோ உன் தகப்பன் திருமணத்தின் நாள் உன் தகப்பனையும், தாத்தாவையும், சித்தப்பாவையும் உன் அம்மா வழியினர் தாக்கினார்கள் நான் என்னால் இயன்ற மட்டும் என் பெலவீனத்தில் அவர்களை காப்பாற்றசென்றேன். அதனால் ஏற்பட்ட வீரவடுக்கள் தான் இவைகள் என்று கூறுவாள். அப்பொழுது அங்கு நின்றுக்கொண்டிருக்கும் அவர்கள் தாய் வெட்கத்தில் தலை கவிழ்ந்து தரையை நோக்கிக்கொண்டு நிற்பாள். விவரம் அறிய வந்த அந்த பிள்ளைகளின் அம்மா வழி தாத்தாவும் பாட்டியும் முகம் கரியிலும் கருத்துக்காணப்படும்.**

**57. மற்றொரு மனைவி தன் கணவன் தன் குடும்பத்தினரால் தாக்கப்படுவதை கண்டு கொள்ளாமல், தனக்கு இந்த கணவன் இல்லாவிட்டாலும் பரவாயில்லை, தன் தந்தை போதும் என தன் தந்தைக்கு காவல் இருக்கிறாள். சில மணி நேரங்களுக்கு முன்பு கை பிடித்த கணவனை மறந்தாள். அவரோடு செய்த உடன்படிக்கைகளை காற்றிலே பறக்கவிட்டாள். செய்த ஒப்பந்தங்களை அவமாக்கிப்போட்டாள். மனைவி புருஷனை சூழ்ந்து பாதுகாப்புக்கொடுக்காமல் தன் தகப்பனை சூழ்ந்து பாதுக்காப்பு கொடுத்தாள். தன் சகோதரர்களை கலவரத்திலிருந்து நிறுத்த அவளுக்கு மனமில்லை. ஏன் இந்த கணவன் மடிந்தால் மறுகணவனை சில நாட்களில் கண்டடைய முடியும். ஆனால் இந்த தந்தை கடந்து சென்றால் மறுதந்தையாக ஒருவரை இனி வாழ்க்கையில் பெற முடியாதே என்ற பரந்த மனப்பான்மையாக இருக்குமோ? இது எனது கணிப்பு.**

**58. இந்த பெண்ணுக்காக தானா எனது மகன் மூன்று ஆண்டுகளாக காத்திருந்தான்? எனது மனைவி வீட்டார், மற்றும் சில ஆவிக்குரிய சகோதரர்கள் வெறுப்புக்குள்ளாகி, முடிவில் நாங்கள் கண்டடைந்தது இந்த பெண்ணைத்தானா? இவளை குறித்து தான் தேவன் தெரிந்துக்கொண்ட பாத்திரம் என அகமகிழ்ந்தோமா? எங்கள் மகன் தன் சரித்திரத்தின் பாகத்தை கண்டடைந்தான் என இவளைக்குறித்துதான் பெருமைப்பட்டோமா? எதிர்நோக்கி இருக்கும் காலங்கள் இதற்கு நிச்சயமாக பதில் கூறும் என**

கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன்.

59. கலவரநேரத்தில் KGF சகோதரனும், அவரது மனைவியும் எங்களை அங்கும் இங்கும் ஓடி பாதுகாத்து வந்தார்கள் கும்பல் அவர்களையும் தாக்காமல் விடவில்லை. நானும் என் பிள்ளைகளும் தரையில் உருண்டு புரண்டு எங்கள் ஷூ கால்களால் எங்களை கூடிய மட்டும் பாதுகாத்து வந்தோம். என்னையும், என் பையன்கள் இருவரையும் கர்த்தரே களத்தில் இறங்கி பாதுகாத்தார் என கூறலாம். ஏனென்றால் நாங்கள் உயிரோடு அந்த இடத்தில், அந்த மணிவேளையில் சாட்சியாக எழுந்து நின்றது கர்த்தருடைய சுத்த கிருபைதான். நான் எந்த மணிநேரத்திலும் மரணத்தை எதிர்நோக்கிக்கொண்டிருக்கும் ஒரு இருதய நோயாளி (Triple Vessel Heart disease patient). அப்படியிருந்தும் ஒரு கலவரத்தை சந்தித்தேன், உயிரோடிருக்கிறேன். இது என் தேவனுடைய சுத்த கிருபையால்லாமல் வேறு என்ன?

60. முடிவில் எனக்கு அறிமுகமான, ஆனாலும் என்னை முகமுகமாக காணாத சென்னை, அருகம்பாக்கம் சகோ.தேவராஜன், ஒரு ஊழியக்காரனும் அவரது குடும்பத்தினரும் பெண் எடுத்த வீட்டாரால் தாக்கப்படுவதையும் அவர்கள் பொருட்கள் சூரையாடப்படுவதையும் கண்டு அவேசத்தில் கெஞ்சிக்க, கலவரம் முடிவுக்கு வந்தது. என்னை என் பெண் வந்து தாங்கிக்கொண்டாள் என் இளைய மகனை KGF சகோதரர் தாங்கிக்கொண்டு வர, கலவரக்காரர்களில் ஒருவன் அவன் தலையில் சேர் ஒன்றைக் கொண்டு அடிக்க அவனுக்கு காயம் ஏற்பட்டு தலையிலிருந்து ரத்தம் கொட்டியது. ஆனாலும் கர்த்தருடைய கிருபையினால் அவன் உயிர் பிழைத்தான். எங்களை பாதுகாக்கும்படி நிச்சயமாக கர்த்தர் எங்களோடிருந்தார் என்பதற்கு சாட்சியாக நானும், எனது மனைவியும், எனது இரண்டு குமாரர்களும் உயிரோடு சாட்சியாக இருக்கிறோம்.

61. கலவரகாரர்கள் கொள்ளைக் கூட்டமாகவும் மாறினார்கள். ரூ. 10,000/- மதிப்புள்ள எனது இரண்டாவது மகன் மொபைலை சூறையாடி சென்றனர். எனது ரூ. 1,500/- மதிப்புள்ள கைக்கடிகாரத்தையும் பறித்துச் சென்றனர். இது பழங்காலத்து யுத்தம் மற்றும் கொள்ளை போன்ற ஒரு சம்பவமாக இருந்தது. கலவரம் முடிந்தவுடன் போலிஸ் ஒருவர் வந்தார். நானும் எனது பிள்ளைகளும், சில ஆவிக்குரிய சகோதரர்களுமாக என் மனைவியை வேலூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டுச்சென்றோம். அங்கு Assault Case என பதிவு செய்து சிகிச்சை எனது மனைவிக்கும், இளைய மகனுக்கும் கொடுக்கப்பட்டது. ஆனாலும் போலிஸ் நடவடிக்கைகள் எதுவும் வேண்டாம் என கேட்டுக்கொண்டோம். என் மனைவி காலில் எலும்பு முறிவு என எக்ஸ்ரே ரிப்போர்ட் தெரியவந்தது. உடனே அவர்களை சென்னை கொண்டுச்செல்ல திருமண மஹாலுக்கு எங்கள் உடைமைகளை எடுத்துச்செல்ல விரைந்தோம்.

**62. மணமகனும் அவரது குடும்பத்தினரும் அந்த திருமண விருந்தை ருசிபார்க்கவில்லை. இது திரு. ஆசேருக்கு மிகவும் வெட்கக்கேடு. இவர் தன் குடும்பத்தாரோடு சகேயுவை போன்று மனந்திரும்பாவிட்டால் என் குடும்பத்தினருக்கும் இவர் குடும்பத்தினருக்கும் என்ன உறவு? என் மகனுக்கு அவரருடைய மகள் மனைவி. அத்துடன் உறவு முடிந்தது.**

63. நாங்கள் எங்கள் உடைமைகளை எடுத்துக்கொண்டு திரும்ப திருமண மஹாலுக்கு வரவும் எங்களுக்கு மீண்டும் ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. அது என்னவென்றால் எங்கள் மீது வரதட்சனை கொடுமை கேஸ் பதிவுசெய்யவும் அதின் பேரில் தான் நாங்கள் மண்டபத்தில் ரகளை செய்தோம் என அங்குள்ள போலிஸ் ஸ்டேஷனில் உள்ள ஒரு காவலாளர் ஒத்தாசையுடன் திரு. ஆசேர் காத்திருந்தார். தேவனுக்கு பயப்படுகிற பயம் திரு. ஆசேர் அவர்கள் இருதயத்தில் முற்றிலுமாக இல்லை என்பதை அந்த நேரத்தில் எனக்குள் இருந்த ஆவியில் உணர்தேன். இதிலிருந்து திரு. ஆசேர் எப்படிபட்ட மனிதர் என்பதை நீங்கள் நன்கு அறிந்துக்கொள்ளலாம். அவர் உள்ள்தில் எள் அளவுகூட தெய்வ பயம் கிடையாது. ஒரு தேவ பக்தியற்ற மனுஷன். தேவனுடைய ஆவி அல்லாத வேறொரு ஆவி அவருக்குள் இருந்து கிரியை செய்வதை என்னால் உணர முடிந்தது. முடிவில் பெயர் அளவில் சமரசம் ஏற்பட்டது. அதிகாலை மணி 2.00 ஆகி விட்டது. அதன்பின் நாங்கள் சென்னை திரும்பினோம். அன்று இரவு முழுவதும் அங்கும் இங்கும் அலைச்சல். கண்களுக்கு தூக்கம் இல்லை. 26 ந் தேதி இரவு முழுவதும், 27 ம் தேதி அதிகாலை 6.30 மணி வரை எங்கள் சரீரத்தில் இளைப்பாறுதல் இல்லை, மனதில் அமைதலும் இல்லை. 27 ம் தேதி அதிகாலை 6.30 மணியளவில் கர்த்தரின் கிருபையினால் சுகபத்திரமாக நாங்கள் சென்னை வந்து சேர்ந்தோம்.

64. என் மூத்த மகனை, மருமகளை திரு.ஆசேர் வீட்டில் விட்டு வர எனக்கு மனமில்லை? ஏனென்றால் கலவரக்கோஸ்டி அங்குதான் அடைக்கலம் கொண்டுள்ளது. ஆனாலும் கர்த்தர்மேல் மனப்பாரத்தை வைத்துவிட்டு பிள்ளைகளை அனுப்பிவைத்து, அவர்களை 27 ந் தேதி காலை சென்னைக்கு அனுப்பிவிடவேண்டும் என கூறிவந்தேன் அதன்படி மகனையும் மருமகளையும் திரு. ஆசேர் மற்றும் அவரது மனைவி இன்னும் அவரது உறவினர்கள் 3 பேர் எனது இல்லத்திற்கு வந்து என் வீட்டில் விட்டுச்சென்றனர். திருமணத்தில் வந்த சில அன்பளிப்புகளையும், இனிப்பு வகைகளையும் கொண்டு வந்திருந்தனர்.

65. 28 ந் தேதி எனது மனைவியை சென்னை பூந்தமல்லியில் உள்ள சுந்தர் மருத்துவமனையில் அட்மிட் பண்ணினோம். இங்கும் Assault Case என்றே பதிவு செய்து, போலிஸ் நடவடிக்கைகள் எதுவும் வேண்டாம் என கேட்டுக்கொண்டோம். 29ந் தேதி மாலை அறுவை சிகிச்சை நடந்தது. ஒரு வாரம் மருத்தவமனையில் இருந்தார்கள். செப்டம்பர் 15 வரை படுக்கையைவிட்டு எழுந்திருக்க கூடாது, படுக்கையிலே இருக்கவேண்டும், அதன்பின் 45 நாட்கள் வாக்கர் உபயோகித்து முறிவு இல்லாத காலினால் சற்று நடக்கலாம் எனவும், ஆக மூன்று மாதங்கள்

முடிந்தபின்பு அதாவது நவம்பர் மாதம் முதலாம் வாரத்தில் எலும்பு முறிந்தக் காலைக்கொண்டு நடக்கலாம் எனவும் மருத்துவர் கூறிவிட்டார். தன் வாயினாலே சமாதானமாய் பேசி, தன் உள்ளத்திலே எனக்கு பதிவிடை வைத்த திரு. ஆசேர் அவர்களால் எனக்கு மருத்துவ செலவு ரூ. 50,000/- மேல் ஆகிவிட்டது. கர்த்தர் தேவைகளை சந்தித்து வருகிறார். அவருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம். இந்த வீண் செலவு யாரால்? அனைத்தும் திரு. ஆசேர் அவர்களின் திருவிளையாடல்களினால் வந்த விளைவு தானே? ஆதலால் அவர்கள் தான் பொறுப்பு

66. இருதயத்தில் விருத்த சேதனம் இல்லாத ஒரு அஞ்ஞான, யேசபேல் மார்க்கத்தை சார்ந்த ஒரு குடும்பத்தில் பெண் எடுத்துவிட்டேன். **எனக்கு திரு. ஆசேர் குடும்பத்தில் சம்பந்தம் கொண்டதின் மேன்மையானது வருத்தமும், சஞ்சலமுமே.** இனி அது நன்மையானலும் தீமையாலும் சரி, நான் இனியும் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிந்து என்னை காத்துக்கொண்டு செல்லவேண்டும். அதில் மனமகிழ்ச்சியாகவும் இருக்கவேண்டும். அதுவே என் மேல் விழுந்த கடமை.

**67. என் மகனது திருமண காரியத்தில் திரு. ஆசேர் என்னை எந்தெந்த வகைகளில் ஏமாற்றினார் மற்றும் எனக்கு நஷ்டங்களை ஏற்படுத்தினார் என்பது குறித்து ஒரு பட்டியலை கீழே தருகிறேன்.**

அ) தனது மருமகன் திரு டேனியேல் பால்சிங் மூலமாக, குடும்பத்தில் அனைவரும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் எடுக்க இருக்கிறோம் எனக் கூறி, மணப்பெண்ணை தவிர மற்றபடி அனைவரும் வேத வாக்கியங்களில் காணப்படாத ஒரு ஞானஸ்நானத்தை எடுத்து என்னை ஏமாற்றினர் அதினால் அவர்கள் தங்களை தாங்களே வஞ்சித்துக்கொண்டார்கள்.
ஆ) ஆரம்பத்தில் நிச்சயதார்த்த சேலை அவர்களே எடுத்துக்கொள்ள சம்மதித்து, பின் அந்த செலவை என் மீது சுமத்தி வஞ்சித்தார்கள்.
இ) மேலும் பெண்ணுக்குரிய திருமணப்பட்டையும் அவர்களே எடுத்துக்கொள்ள சம்மதித்து பின் அந்த செலவையும் என் மீது சுமத்தி, என்னை ஏமாற்றினார்கள்
ஈ) மாப்பிள்ளையை வரவேற்று அவருக்கு இரண்டு பவுன் மைனர் செயின் பரிசாக கொடுப்போம் என கூறி அவரை வரவேற்க்காது, பரிசு ஏதும் கொடுக்காது ஏமாற்றினார்கள்.
உ) பெண்ணுக்கு ஆஸ்தியாக 80 பவுன் தங்கம் கொடுப்போம், அதில் 9 பவுன் தாலி விஷயத்தில் குறைத்து, 71 பவுன் திருமணத்தன்று ஒரு பெட்டகத்தில் வைத்து மகளிடம் கொடுப்போம் என கூறி, அதற்காக ஒரு நாடகத்தை அரங்கேற்றி, அப்படியேதும் பேச வில்லை என மறுதலித்து என்னை ஏமாற்றினார்கள். திரு. ஆசேர் மற்றும் அவரது மனைவி திருமதி அன்னத்தாய் இருவரும் என் வீட்டில் வந்து நாங்கள் 80 பவுன் எங்கள் பெண்ணுக்கு ஆஸ்தியாக கொடுப்போம் என்று கூறியபோது கூட நான் இது உங்களால் முடியுமா? முடியுமா? என திரும்பத் திரும்ப கேட்டேன். முடியும் எனவே கூறினார்கள் ஆனால் முடிவில் என்னை ஏமாற்றி, மோசம் போக்கினார்கள்.
ஊ) என் இளைய மகனுடைய பையிலிருந்து கலவரத்தின் போது கலவரக்காரர்கள் அவனது ரூ. 10,000/- விலை மதிப்புள்ள நோக்கியோ மொபைலை சூறையாடிச் சென்றனர்.
எ) அவ்வாறாகவே கலவரக்காரர்கள் என்னுடைய கையிலிருந்து ரூ. 1,500/- மதிப்புள்ள எனது கைக்கடிகாரத்தையும் பறித்துச்சென்றனர்
ஏ) இதுபோக என் மனைவியை மேடையிலிருந்து கீழேத்தள்ளி, அதனால் அவர்கள் வலது முழங்கால் முறிய, அதனால் எனக்கு இதுவரை ஆன மருத்துவ செலவு ரூ. 50,000/- க்கும் மேல்
ஐ) மேலும் இதுவரை என் குடும்பத்தினருக்கு உண்டான மனஉலைச்சல், மனமடிவு, மனநோவு, மனநிம்மதியின்மை போன்ற பாதிப்புகள் சரீரத்திலும், உள்ளத்திலும் அதிகம் அதிகம்

**68. முடிவாக திரு. ஆசேர் அவர்கள் :**

அ) நிச்சயதார்த்த சேலை விஷயத்தில் என்னை ஏமாற்றிய பணத்தை எனக்கு திரும்பத்தரவேண்டும்
ஆ) திருமணப்பட்டில் என்னை ஏமாற்றிய பணத்தையும் எனக்கு திரும்பத்தர வேண்டும்
இ) திருமதி. கிறிஸ்லிக்கு ஆஸ்தியாக வாக்கு கொடுத்த 80 பவுனில், தாலி போக மீதமுள்ள 71 பவுனையும் அவளுக்கு கொடுக்கவேண்டும்.
ஈ) திரு. ஜாண்பாலுக்கு அன்பளிப்பாக வாக்குக்கொடுத்த 2 பவுனையும் அவருக்கு கொடுக்கவேண்டும்.
உ) கலவரக்காரர்கள் கொள்ளையாடின பொருட்களின் விலையை எனக்கும் எனது இரண்டாவது மகனுக்கும் ஈடுசெய்ய வேண்டும் அல்லது புதிதாக பொருட்களை வாங்கிக்கொடுக்கவேண்டும்.
ஊ) எனது மனைவியின் விபத்திற்கு தார்மீக பொறுப்பு ஏற்று மருத்தவசெலவுகளை என் மனைவிக்கு ஈடுசெய்ய வேண்டும்.
எ) திருமண மஹாலில் உண்டான கலவரத்திற்கு தார்மீக பொறுப்பேற்று, அதிநிமித்தம் எனக்கும் எனது குடும்பத்தினருக்கும் உண்டான மேலே கூறப்பட்ட பாதிப்புகளுக்கு ஈடாக ரூ. 2,50,000/- எனது குடும்பத்தினருக்கு கொடுக்க வேண்டும்

ஏ) திருமதி கிறிஸ்லியின் படிப்பு செலவுகள் அனைத்தையும் அவர்தன் வாக்குப்படி ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனாலும் அவர்களுடைய உணவு, உடை மற்றும் தனிசெலவுகள் அனைத்திற்கும் என் மகன் பொறுப்பு. படிப்பு விஷயத்தில் அது ஒரு குண்டு பின் வாங்க நேர்ந்தாலும் அந்த செலவுகள் அனைத்திற்கும் திரு. ஆசேர் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும்.
ஒருவேளை அவர் இதில் பின் வாங்குவாராகில் அதினால் நான் ஒரு காலும், ஒன்றிலும் அசைக்கப்படுவதில்லை.

**69. காரியத்தின் கடைத்தொகையை கேட்போமாக**

ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், அது நன்மையானாலும் தீமையானாலும் தேவன் நியாயத்திலே கொண்டு வருவார்.

70. எனது மகனுடைய படிப்பு, உத்தியோகம், ஸ்தோற்றம், குணாதிசயம் முதலியவைகளை கருத்தில் கொண்டு திருமதி. அன்னத்தாய் அம்மாவுக்கு தன் இளைய மகள் கிறிஸ்லியை அவனுக்கு விவாகம் செய்து வைக்க ஒரு ஆசை உள்ளத்தில் இருந்தது. அதை நிறைவேற்ற அவர்கள் தங்களுடைய சில காரிங்களை விட்டுக்கொடுக்கவும் ஆயத்தமானார்கள். அதாவது அவர்கள் ஒரு ஸ்தாபன சபையை சேர்ந்தவர்களாக இருந்தாலும் தங்கள் மகளை பெஸ்தெகொஸ்தே அனுபவத்திற்குள் உள்ள ஒரு குடும்பத்திற்குள் கொடுக்க, அதினால் அவர்களுக்கும் மற்ற குடும்பத்தினரும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் எடுக்கவும் ஆயத்தமானார்கள்

71. தனது இந்த ஆசையை தனது மூத்த மருமகன் திரு. டேனியேல் பாலசிங்கிடம் கூற, அவரும் தனக்கு விருப்பமில்லாத ஒரு காரியத்தில் ஈடுப்படலானார். கடந்த சில ஆண்டுகளாக இந்த பெண்ணுக்கு வரன் தேடினார்கள். திரு. டேனியலுக்கு எனக்கு ஒரு மகன் இருக்கிறான் என நன்கு தெரியும். ஆனாலும் அவனை அந்த குடும்பத்திற்குள் கொண்டுவர அவருக்கு விருப்பம் கிடையாது. அதாவது என் மகனை, தனது தம்பியை, தனது கொழுந்தியாளுக்கு திருமணம் செய்து வைக்க அவருக்கு விருப்பம் இல்லை. ஆக விருப்பமில்லாத ஒரு காரியத்தில் தன்னுடைய மாமியாரை பிரியப்படுத்த, இந்த திருமணப்பேச்சை என்னிடம் ஆரம்பித்தார்.

72. ஏன் அவர் தன் கொழுந்தியாளை, முறையில் தம்பியாகிய என் மகனுக்கு திருமணம் செய்து வைக்க விரும்பவில்லை? முதலில் என்மகன் அவரை விட அதிகம் படித்தவன். அவரை விட ஒரு நல்ல உத்தியோகத்தில் இருக்கிறவன். அவரை விட அதிகம் சம்பளம் வாங்குகிறவன். ஆக அவரை விட அனைத்துக்காரியங்களிலும் சற்று உயர்ந்த நிலையில் உள்ளான். அந்த நிலையில் அவனை தன் கொழுந்தியாளுக்கு திருமணம் செய்து வைத்தால், இரு பெண்களை உடைய இந்த குடும்பத்தில், அதாவது ஆண் வாரிசு இல்லாத அந்த குடும்பத்தில், தன் நிலை மட்டம்தட்டப்படும், இந்நாட்களில் உள்ள தன் அந்தஸ்து அந்த குடும்பத்தில் குறைந்து விடும், தனக்குள்ள மதிப்பும் மரியாதையும் என் மகன் பக்கம் திரும்பிவிடும் என்ற ஒரு தவறான துர்சிந்தனையை சாத்தான் அவர் உள்ளத்தில் கொண்டு வந்தான். அது தான் காரியம். திரு. டேனியேலுடைய பெற்றோரும் அதே சிந்தனைக்குள்ளானார்கள். அவரின் மனைவியும் அந்த வீட்டில் தான் கொடிக்கட்டி பறப்பது பாதிக்கப்படுமோ என்ற மனநிலைக்கு ஆளானார்கள். இதனால் இவர்கள் திரு. டேனியேலை விட உயர்ந்த ஸ்தானத்தில் உள்ள எந்த ஒரு புருஷனையும் தன் கொழுந்தியாளுக்கு திருமணம் செய்து வைக்க விரும்பவே இல்லை. திரு டேனியேலை விட அனைத்து நிலைகளிலும் சற்று தாழ்ந்த நிலையில் உள்ள ஒரு பையனையே இவர்கள் தேடினர்.

73. இப்போது திரு டேனியேலும் அவரது சகாக்கலாகிய அவரது மனைவியும் அவரது பெற்றோரும் இருதலை பாம்பு போல் ஆனார்கள் ஒருபக்கம் என் பையனை மேற்கூறிய காரணங்கள் நிமித்தம் அவர்கள் விரும்பவில்லை. மறுபக்கம் திருமதி.அன்னத்தாய் அவர்களின் ஆசையையும் நிறைவேற்ற வேண்டும். ஆதலால் தங்களுக்கு விரும்பமில்லாத ஒரு காரியத்தை விரும்புவது போல் காட்டி, ஒரு நாடகம் ஆடினார்கள்.

74. ஆக வேறுவழியில்லாமல் திருமண பேச்சு வார்த்தையை என்னிடம் தொடங்கினர். நான் என் பெந்தெகொஸ்தே அனுபவத்தையும், உபதேசங்களையும், போதனைகளையும் எடுத்து கூற அனைத்துக்கும் இசைந்து வந்தார்கள். ஆனாலும் திரு. டேனியேல் கபடத்திற்கு ஊற்றாக இருந்தார். ஒரு பக்கம் திருமண பேச்சு, மறுபக்கம் அதை நிறுத்த வழிமுறைகளையும் தேடினார்கள். ஆக என்னிடம் பேசுவது யாவும் தன் கபட நாவுடன் தான்.

75. பெண் வீட்டார் என்னுடைய நிபந்தனைகள் அனைத்தையும் ஒப்புக்கொண்டதாலும், மேலும் எனது மூத்த சகோதரன் சம்பந்தம் எடுத்த வீடு, இவையெல்லாம் என் மனதில் கொண்டு நானும் நல்ல எண்ணத்துடன், அதாவது அண்ணனும் தம்பியும் ஒரே வீட்டில் பெண் கொள்வது நலமாக இருக்கும் என நினைத்தேன்.

76. இப்போது திரு. ஆசேர் குடும்பத்தில் கொடிக்கட்டி பறப்பது அவரது மூத்த மகள் திருமதி. எமிலி. அனைவரும் அவர் சொல்லுக்கு மறுப்பு தெரிவிக்கமாட்டார்கள். அவர் கணவர், ஆண் வாரிசு இல்லாத அந்த குடும்பத்தில் எடுபிடி வேலைகள் செய்துக்கொண்டு அவர்கள் ஆதரவில் ஒரு வாழ்க்கை வாழ்ந்து வருகிறார். திரு. ஆசேர் என் மூத்த சகோதரர் வாக்கு, தேவவாக்கு என நினைப்பவர். இப்போது திரு. டேனியேல் அவரது மனைவி திருமதி. எமிலி, திரு. சுகிர்தராஜ் அவர்கள் ஒரு கூட்டு. இவர்கள் இந்த திருமண இணைப்பை முறியடிக்க திட்டங்கள் தீட்டி செயல்படவும் ஆரம்பித்தனர்.

77. ஒரு பக்கம் திரு டேனியேல் அவர்களுக்கு திருமதி. அன்னதாய் அவர்களிடம் நல்லப்பெயர் கிடைத்தது. ஏனெனில் அவர்களின் விருப்பத்தின்படி என் மகனை அவர்களது இளைய மகளுக்கு பேசி முடித்தார். மறுபக்கம திரு. டேனியேல் திருமதி.அன்னத்தாய் அவர்களை மோசம்போக்கவும் செயல்பட ஆராம்பித்தார். எப்படியெனில் என்னிடம் ஒரு நாள், பாருங்கள் சித்தப்பா, கிச்சி (கிறிஸ்லி) மிகவும் ஊதாரித்தனமாக செலவு செய்பவள். அவளுக்கு பல வரன்களை பார்த்தோம் யாரும் அவளை விரும்பவில்லை. அவள் கூட படித்தவர்கள் கூட அவளை விரும்பவில்லை, சிநேகிதிகளுடன் நாள் முழுவதும் வீட்டில் தங்காமல் சுற்றித் திறிவாள். மிக்க ஆடம்பரமாக செலவுகள் செய்வாள் BOT படித்துமுடித்து CMC யில் வேலை செய்தாள். ஒரு பைசாகூட வீட்டிற்கு கொடுக்கவில்லை அந்த வீட்டை

நடத்துவது எல்லாமே என் மனைவிதான், அவள்தான் குடும்பத்தை தாங்கி வருகிறாள். கிறிஸ்லியின் ஊதாரித் தனமான செலவுகளை பார்த்து நாங்கள் அவளிடம் இனி நீ தான் வீட்டு டெலிபோன் பில்கள் அனைத்தையும் கட்ட வேண்டும் என நிர்பந்தப்படுத்தி கட்ட வைத்தோம். இவ்வாறாக கிறிஸ்லியைப் பற்றி பல குறைகளை கூறி என்னை மனமடிவுக்குள்ளாக்க மறைமுகமாக முயற்சித்தார். நானோ அவள் நல்லவளோ, கெட்டவளோ அவளை உறுதி செய்தபின் அந்த முடிவிலிருந்த மாறக்கூடாது என்ற என்னுடைய நம்பிக்கையில் நான் கற்றுக்கொண்ட உபதேசங்களில், நான் போதிக்கும் உபதேசங்களில் உறுதியாக இருந்தேன். ஆக இந்த திருமண இணைப்பை நிறுத்த திரு. டேனியேல் கையாண்ட முதல் முயற்சி தோல்வியை கண்டடைந்தது.

78. இரண்டாவதாக, திருமணத்தில் பெண்ணுக்காக நான் செலவு செய்ய வேண்டிய அனைத்து செலவுகளையும் பெண் வீட்டாரே செலவு செய்து, அந்த தொகையை எனக்கு பெண் வீட்டார் கொடுக்க இருக்கும் ரொக்கப்பணத்தில் கழித்து விட்டு மீதி ஏதாவது எனக்கு கொடுக்க விரும்பினால் சந்தோஷமாக கொடுக்கவேண்டும், அதில் நிர்பந்தம் எதுவும் இல்லை மேலும் அதில் டிமெண்ட் எதுவும் இல்லை என முடிவு செய்தோம். இந்த சந்தோஷமான தொகையை கேள், கேள் என என் சகோதரர் திரு. சுகிர்தராஜ் வற்புறுத்த நான் கடந்து மூன்று ஆண்டுகளில் அது வரை எனக்கு வந்த மிக குறைந்த ரொக்கப்பணமாகிய ரூ. 2,00,000/- முடிந்தால் வாங்கிக்கொடு என கூற, அவர் அதை பெரிதுப்படுத்தி திருமணத்தை நிறுத்த திட்டமிட்டார் நான் ஊழியக்காரன் நீங்கள் உங்கள் பெண்ணுக்கு எதும் சந்தோஷமாக கொடுப்பதை வாங்கிக் கொள்கிறேன் என கூறிவிட்டு பாருங்கள் இப்போது எனது தம்பி ரூ. 2,00,000 டிமெண்ட் பண்ணுகிறான், இவனை எப்படி நம்ப முடியும் என ஒரு கருத்தை பெண் வீட்டார் மனதில் திணித்து திருமண இணைப்பை துண்டிக்க நினைத்தார். ஆனால் பெண் வீட்டாரோ அதை நிராகரித்து விட்டு எனக்கு ரூ. 1,50,000/- சந்தோஷமாக தருவதாக கூறினார்கள் ஆக திரு. சுகிர்தராஜ் கையாண்ட இரண்டாவது முயற்சியும் தோல்வி.

79. அடுத்து ஞானஸ்நானம் வந்தது. நான் அவர்கள் குடும்பமாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் எடுக்க முன் வந்தது குறித்து பெருமையாக கடந்த இதழில் எழுதியிருந்தேன். ஆனால் முடிவில் திருமதி. எமிலி சூழ்ச்சியின் நிமித்தமாக அவர்கள் குடும்பத்தினர் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால், வேத வாக்கியங்களில் இல்லாத ஒரு ஞானஸ்நானத்தை பெற்றனர். கிறிஸ்லிக்கும் ஞானஸ்நானம் கொடுக்க முயற்சித்தனர் ஆனால் அது நடக்கவில்லை. ஆக ஞானஸ்நானத்தின் மூலம் எனக்கு மனமடிவை உண்டாக்கி இந்த திருமண இணைப்பை தடுக்க முயற்சித்தனர். ஆக திருமதி. எமிலி மூலம் மூன்றாவது முயற்சியும் தோல்வியையே கண்டடைந்தது. ஆனால் நானோ நான் அறிந்த, போதிக்கும், உபதேசங்களை என் ஜீவியத்தில் கடைப்பிடித்து அதில் நிலைத்து நிற்கவே விரும்பினேன்.

80. நான்காவதாக, பெண்வீட்டார் எனக்கு கொடுத்த வாக்குப்படி, நாங்கள் செய்து கொண்ட ஒப்பந்தம் படி, நான் பெண்ணுக்கு எடுக்கவேண்டிய நிச்சயதார்த்த சேலை, திருமணப்பட்டு போன்றவைகளை பெண் வீட்டாரே எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனால் அந்த செலவுகளை என் மீது போட்டு இதன் மூலமாக இந்த திருமண இணைப்பு நிறுத்தப்படாதா என நினைத்தார்கள். என்னை எந்தெந்த வகையில் மோசம் போக்க முடியுமோ அத்தனை முறைகளையும் கையாண்டார்கள். ஆனால் இந்த துணி மணி விஷயத்திலும் நான் பொறுமையை காத்துக்கொண்டு, பெருந்தன்மையாக நடந்துக்கொண்டு நான் செய்யவேண்டியதல்லாத செலவுகளை நானே செய்தேன். ஆக நான்காவது முயற்சியும் அந்த கோஷ்டியினருக்கு தோல்வியையே கொண்டு வந்தது.

81. ஐந்தாவதாக நிச்சயதார்த்தத்தில் மணமகளை சற்று உலகப்பிரகாரமாக அலங்கரித்து அதன் மூலம் எனக்கு வெறுப்பை உண்டுபண்ணி, நிச்சியதார்த்த வைபவத்தை தாறுமாறாக்கி (என் சகோதரர் அந்தவைபவத்தில் உண்டாக்கிய கலாட்டாவை ஏற்கனவே எழுதியுள்ளேன்) அதன் மூலமாக நான் நிச்சியதார்த்தத்தை நிறுத்தி விட மாட்டேனா என் முயற்சித்தனர். புசிக்கதகாத கெட்டுப்போன அத்திபழங்களுக்கு ஒப்பான ஒரு குடும்பத்தில் பெண் கொண்டேனே என என் மனம் புண்பட்டாலும், வேத வாக்கியங்களைக் கொண்டு என்னை தேற்றிக்கொண்டேன். ஆக இவர்களது ஐந்தாவது தந்திரமும் பளிக்கவில்லை.

82. ஆறாவதாக தாலிக்கொடியிலும் பிரச்சனையை உருவாக்கினார்கள். நானோ வஞ்சக வழியில் நடத்தும் ஆவி பெண்வீட்டாரை ஆட்கொண்டுள்ளதை அறிந்துக் கொண்டேன். 80 பவுன் நகை தன் மகளுக்காக அவர்கள் ஆஸ்தியிலிருந்து கொண்டுக்க வைத்திருக்கிறோம், ஆனாலும் அவள் அதை போட்டு அனுபவிக்க முடியவில்லை என்ற மனபாரம் அவர்களுக்குள் இருந்தது ஆதலால் நான் 12 பவுன் தாலிக்கொடி நீங்கள் வைத்திருக்கும் நகையிலிருந்து செய்து விடலாம் என்றேன். சரி என்றார்கள். முடிவில் தாலிக்கொடி நானே செய்ய வேண்டும் என்று கூறி அந்த செலவையும் என் மீது திணிக்க நினைத்தார்கள். நானோ தாலி நான் செய்வதாக இருந்தால் 1 பவுனில் தான் செய்வேன் என்று உறுதியாக கூறினேன். உடனே தாலிக்கொடிக்காக 9 பவுன் கொடுக்க முன்வந்தார்கள். ஏனெனில் மூத்த மகள் 9 பவுனில் தாலி அணிந்துள்ளாள் ஆதலால் இளையவள் அவளை மிஞ்சக்கூடாது என்ற எண்ணத்தில் அப்படி செய்தார்கள். தாலிக்கொடி விஷயத்திலும் பிரச்சனைகளை உருவாக்கி அதிலாவது திருமண இணைப்பு தடைபடுமா என நினைத்தார்கள் அதிலும் அவர்கள் வெற்றிபெறவில்லை.

83 இனி காரியங்கள் அனைத்தும் முடிந்து திருமணம் என்ற நிலைக்கு கடந்து வந்து விட்டது. இதிலாவது நுழைந்து காரியங்களை தாறுமாறாக்குவோம். பையன் வீட்டாருக்கும் பெண் வீட்டாருக்கும் உள்ள உறவுகளை முறிப்போம். இளையவளை முற்றிலுமாக வீட்டிலிருந்து பிரித்து விட்டு திரு.ஆசேர் சொத்துக்களை தன் பக்கம் தக்க வைத்துக்கொள்ளலாம் என திரு. டேனியேல் திட்டம் தீட்டினார். திரு. டேனியேல், திருமதி. எமிலி திருமணத்தில் நடந்த அனைத்துக் காரியங்களையும் இளைவள் திருமணத்தில் மட்டப்படுத்தினர். அதாவது அவர்கள் திருமணத்தை

போன்று சிறப்பாக எதுவும் இளையவள் திருமணத்தில் நடைபெறாத அளவிற்கு மட்டம் தட்டினர். எதிலும் எங்கும் சிறப்பு இல்லை. முதலாவது மாப்பிள்ளை வீட்டார் வேலூர் வந்து சேரும் போது அவரை வரவேற்க ஒரு நாதிகூட இல்லை. நாங்கள் இரண்டு பவுன் மைனர் செயின் போட்டு வரவேற்போம் என்ற வாக்கு காற்றில் பறந்தது. உலகத்தான் கூட வானவேடிக்கையுடன் மாப்பிள்ளைக்கு ஏதாவது அணிவித்து வரவேற்பான். அந்த அளவிற்கு எங்களை மட்டம் தட்டினார்கள். மாப்பிள்ளை வீட்டார் தங்க ஏற்பாடுகள் செய்யாது அதில் பிரச்சனையை உண்டுபண்ணினார்கள். இப்படியாக மாப்பிள்ளை வீட்டாரை எந்தெந்த வகையில் கோபத்திற்குள்ளாக்கி, கேவலப்படுத்தி, இடையூறுகளை உண்டாக்கி, கலகத்ததை ஏற்படுத்தி திருமண இணைப்பை துண்டிக்க வேண்டும், இருவீட்டார் உறவை முறிக்க வேண்டும் என்றே திரு டேனியேல் சகாக்கள் செயல்பட்டனர்.

84. அந்த கோஷ்டியினர் திருமண ஆராதனைக்கு சபைக்கு வரவில்லை. இங்கு மற்றொரு காரியத்தை கூற விரும்புகிறேன். என்னுடன் பிறந்த மூன்று சகோதரர்களில் திரு. சுகிர்தராஜ் மாத்திரம் பெண் வீட்டார் சார்பாக திருமண விருந்தில் வந்து கலந்துக்கொண்டார். ஆனால் திருமண ஆராதனையில் வந்து கலந்துக்கொள்ளவில்லை. என்னுடைய இதர இரண்டு சகோதரர்கள் குடும்பத்தினர் முற்றிலுமாக புறக்கணித்தனர். அவர்களின் குடும்பங்களில் யாரும் வந்து கலந்துக்கொள்ளவில்லை. என்னுடைய ஒரே மூத்த சகோதரி தனது வயது மற்றும் பெலவீனத்தின் நிமித்தமாக வந்து கலந்துக்கொள்ளவில்லை ஆனாலும் அவர்களின் பெண் பிள்ளைகள் இருவரும் வந்து கலந்துக்கொண்டனர்.

85. ஆராதனை முடிந்து மணமக்கள் திருமண மண்டபத்திற்கு வந்த போது கூட பெண் வீட்டார் யாரும் அவர்களை வரவேற்று உபசரிக்க முன் வரவில்லை. திருப்ப திருப்ப சொல்லப்போனால் எங்களை எந்த அளவிற்கு அவமானப்படுத்த முடியுமோ, வெட்கபடுத்த முடியுமோ அந்த அளவிற்கு அவமானப்படுத்தி, வெட்கப்படுத்தி தங்கள் வஞ்சக வலையில் விரைந்தோடினார்கள். இவர்களுக்கு நன்கு தெரியும் நான் பூக்கள், வெற்றிலை பாக்கு போன்றவைகளை திருமண வைபவத்திற்குள் எங்கும் கொண்டுவர கூடாது என கேட்டக்கொண்டது. அவர்களும் கோவில் மாடு போன்று தலையாட்டினார்கள். பின்பும் மண்டப வாசலில் ஒரு தட்டில் பூக்களை கொண்டு வைத்து கலகத்ததை உண்டுப்பண்ணவே எதிர்நோக்கிக்கொண்டிருந்தார்கள். இதனால் கலவரம் ஆரம்பித்தது. ஆனால் அடங்கியது. மீண்டும் இனிப்பு பண்டங்கள் விஷயத்தில் பிரச்சனைகளை உண்டுபண்ணினார்கள். அதுவும் ஓய்ந்தது.பின்பு மதுபானம் மேற்கொண்ட ஒரு மனுஷனை மேடைக்கு அனுப்பி மணமகனிடம் பிரச்சனையை உண்டாக்கினர். முடிவில் கொடுமைக்கும் கொள்ளைக்கும் ஆளானார்கள்.

86. திரு. சுகிர்தராஜ் தீயை வைத்துவிட்டு அப்புறம் சென்றுவிட்டார். தீ நன்கு பற்றி எறியும் என அவருக்கு தெரியும். ஏனென்றால் எரிகிற தீயில் எண்ணெயை ஊற்ற ஆட்களை வைத்திருந்தார். தீ பற்றி எரிந்து திருமதி. அன்னத்தாய் அவர்களின் தங்கையின் பிள்ளைகள் மற்றும் அவர்கள் குடும்பத்து உறவினர்கள் கலவரத்தில் இறங்கினார்கள். அவர்கள் எங்களுக்கு அறிமுகம் இல்லாவர்கள். ஆதாலால் தான் அவர்களைக்கொண்டு கலவரத்தை ஏற்படுத்தினர் எங்கள் உடைமைகள் சூறையாடப்பட்டன.

87. இப்போது திரு. ஆசேர் எங்கே? தன் மருமகனையும் அவர் வீட்டாரையும் தனது மனைவி குடும்பத்தின் பிள்ளைகள் தாக்கும் போது மேடையில் தன் மக்கள் இருவருரின் அரவணைப்பில் வாய் இருந்தும் பேசாமலும், கண்கள் இரண்டு இருந்தும் அவைகளால் காணக்கூடாமலும், இரு காதுகள் இருந்தும் அவைகள் செவிடாக்கப்பட்டும், கைகள் இரண்டு இருந்தும் அசையாமலும், காகள் இரண்டு இருந்தும் நடக்ககூடாத முடவனாகவும், தொண்டை இருந்தும் கனைக்க முடியாதவராகவும், சத்தமிட கூடாதவாறு ஒரு கற்சிலைப்போல் நின்றுக்கொண்டிருந்ததின் மர்மம் என்ன? கலவரத்தைக் கொண்டு 73 பவுனுக்கு மொட்டைப் போடவே.

88. தன் மீதமுள்ள ஆயுட்காலங்கள் முழுவதும் வாழப்போகிற தன் கணவனை தன் சித்தியின் பிள்ளைகள் தாக்கும் போது திருமதி. கிறிஸ்லி பார்த்துக்கொண்டு தன் தகப்பனை போல் ஒரு சிலையாக நின்றுகொண்டிருந்தது என்ன? தன் வாழ்க்கையில் தாலிக்கட்டிய கணவனைவிட தன் தகப்பன்தான் மேல் என்று உறுதிகொண்டு அசையாது ஒரு கல்தூணாக நின்றது ஏனோ? இனி உள்ள காலங்கள் தான் அதற்கு பதில் கூற வேண்டும்.

89. திருமதி எமிலி தான் நடத்திய சதி திட்டம் நிறைவேற்றப் பட்டு வருவதைக்கண்டு அதில் மகிழ்ச்சியுடன், புன்னகையுடன், மிடுக்கான தோரனையுடன் அங்கு மேடையில் நின்றுக்கொண்டிருந்தார்கள்.

90. தன் மருமகனையும், அவர் குடும்பத்தாரையும் தன் தங்கை பிள்ளைகளும் தன் உறவினர்களும் தாக்கும்போது (இவர்கள் தான் கலவரத்தை உண்டுப்பண்ணினார்கள் என்று திரு. சுகிர்தராஜ் அவர்கள் என் மூத்த சகோதரர் திரு ஜெபராஜ் இடம் கூறினார்கள். மேலும் தனக்கும் தன் மகனுக்கும் தன் குடும்பத்தினருக்கும் இதில் எந்த விதமான பங்கும் இல்லை எனவும் கூறி இருக்கிறார்) திருமதி அன்னத்தாய் எங்கே சென்றார்கள்? திரு. சுகிர்தராஜ்யுடன் தீயை மூட்டி விட்டு அது பற்றி எரிகிறதை வெளியே நின்று பாாத்து பரவசமடைந்துக் கொண்டிருந்தார்களா? புலம்பல், அழுகையில் குரல் இவர்களின் காதுகளில் தொனிக்கவில்லையா? தன் கணவரரின் சதி திட்டத்தில் பங்கோ?

91. திருமணத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பு வேலூர் வந்து இந்த சதி திட்டத்தை திரு. ஆசேர் தன் மகன், மருமகளுடன் இணைந்து தீட்டி அதை செயல்படுத்த திருமதி அன்னதாய் அம்மா அவர்கள் சகோதரிகளின் குடும்பத்தாரை உபயோகித்து தன் மகனை மறைத்து ஒரு கலவரத்தை அரங்கேற்றிய திரு. சுகிர்தராஜ் அவர்கள் திறமையை மெச்சிக்கொள்ள வேண்டியது தான். ஆம் திரு. ஆசேர் அவர்களின் இல்லம் his grace (Not His Grace)

ல் உருவாக்கிய சதிதிட்டம் GVRS ராதா வில்வம் திருமண மஹாலில் நிறைவேறியது. ஆனாலும் திருமணத்தை அந்த கோஷ்டியினால் நிறுத்த முடியவில்லை. ஆதலால் மீண்டும் அவர்களுக்கு தோல்வியே.

**92. GVRS ராதா வில்வம் திருமண மஹாலில் நடந்த கலவரத்தின் முடிவு என்ன?** நான் என் மகளுக்கு நகைகள் எதுவும் கொடுப்பதாக கூறவில்லை. நான் அவளுக்கு என் ஆஸ்தியின் ஒரு பங்காக 71 பவுன் (9 பவுன் பாலி போக திருமண நாளன்று ஒரு பெட்டகத்தில் வைத்து கொடுப்பேன் என்று என் வாய் காலேப் யோசுவா வாயோடு பேசியதாக கூறுவது பொய். ஆனாலும் அப்படியே நான் என் மகளுக்கு எதுவும் கொடுக்க விரும்பினால் என் வசதிப்படி, என்னுடைய ஏற்ற வேளையில் அதைக்கொடுப்பேன். நான் கட்டாயமாக 71 பவுன் கொடுக்கவேண்டும் என்று நான் சொல்லாத ஒன்றை காலேப் யோசுவா கூறினால் அவர் மேல் வரதட்சனை கொடுமையின் கீழ் வழக்கு பதிவு செய்வேன் என்று கூறுகிறார். ரொக்கபணம் ரூ. 1,50,000/- மட்டும் கொடுப்பதாக கூறினேன் அதை கொடுத்துவிட்டேன். அத்துடன் முடிந்தது என் கடமை என்கிறார். இவருடைய வாக்கு மூலத்தைக் கேட்டு என் இருதயம் நாதசுரம் போல் துயரமாய் தொனித்தது. சர்ப்பத்தின் விஷத்திற்கு ஒப்பான விஷம் திரு ஆசேர் வாயில் இருப்பதை உறுதிசெய்துக்கொண்டேன் அடுத்து மருமகளுடைய ஒரு ஆண்டு படிப்பு செலவுகள் இருக்கிறது. அதில் என்னென்ன தில்லு முல்லுகள் செய்ய போகிறாரோ தெரியவில்லை. ஆனாலும் திருமதி கிறிஸ்லி ஜுலை 27 முதல் என் வீட்டிற்கு மருமகளாக / மகளாக வந்துவிட்டார்கள். இனி அவர்களை போஷிப்பது பராமரிப்பது, அவர்கள் அன்றாட தேவைகளை சந்திப்பது என் மகன் மேல் விழுந்த கடமையாக இருக்கிறது. அந்த பொறுப்பை அவர் தட்டிகழிக்க முடியாது. அதற்காக அவர் அவர்களுக்கு பிரதிமாதம் ரூ. 3,000/- கொடுக்க முன் வந்துள்ளார். அதை செப்டம்பர் மாதம் முதல் கொடுத்தும் வருகிறார். இப்போது அவர்களுடைய படிப்பு சம்மந்தமான அனைத்து செலவுகளையும் திரு. ஆசேர் கவனிக்க வேண்டும். கவனிப்பாரா என்று பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும். பின் வாங்கும் இருதயமுள்ளவன் தன் வழிகளில் திருப்பதியடைவான் என நீதி : 14:16 கூறுகிறது. அதன் பிரகாரமாக திரு ஆசேர் தன் வழிகளில் இதுவரை திருப்தியாகவே இருக்கிறார். ஆனால் அதன் முடிவு என்ன என்பதை வரும் காலங்கள் தான் பதில் கூறவேண்டும்.

93. ஆனால் ஒன்று, பொய்யை பிரயோகிக்க தன் நாவை வில்லைப் போல் வளைத்து, இத்தனை அட்டூழியங்களையும், அக்கிரமங்களையும் திரு ஆசேர் நடப்பித்தாலும் நான் அவரது மகளை மருமகளாக ஏற்றுக்கொண்டதற்கு காரணம் அவள் என் மகனின் சரீரத்தின் பாகமாக கர்த்தர் தெரிந்துக்கொண்டார் என்று நான் இன்று வரை விசுவாசிக்கிறேன். அந்த நம்பிக்கைக்கு பாத்திரமாக மருமகள் நடந்துக்கொள்வாரா? இதற்கும் பின் வரும் வரும் காலங்கள் தான் பதில் கூறவேண்டும்.

94. இந்த திரு.ஆசேர் உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலை மட்டும் பொய், பொய் என்றே எழுதப்பட்டுள்ளது. ஆதலால் அதை தவிர இவருக்கு வேறுஎதுவும் தெரியாது இவர் என்னிடம் கூறியது போன்று இவரிடம் தங்க நகைகள் எதுவும் கிடையாது. எல்லாம் வெறும் வெத்துவேட்டு. பொய். மாய்மாலம். இதிலிருந்து தன்னை தப்புவித்துக்கொள்ள ஒரு நாடகத்தை திருமண மண்டபத்தில் திரு சுகிர்தராஜ் அவர்களுடன் சேர்ந்து அரங்கேற்றினார். திரு. சுகிர்தராஜ் திருமணத்தை நிறுத்த முயற்சித்தார். ஆனால் அதில் தோல்வியை கண்டடைந்தார். திரு ஆசேர் அவர்கள் 1,000 பொய்யைச் சொல்லி ஒரு திருமணத்தை வெறுங்கையுடன் முடிக்க முயற்சித்தார். தான் நினைத்ததை சாதிக்கவும் செய்தார். ஆனால் எங்கள் துக்கத்தை சந்தோஷமாக மாற்றி, எங்களை தேற்றி, எங்கள் சஞ்சலம் நீங்க கர்த்தர் எங்களை ஆறுதல்படுத்தினார். அவருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம்.

95. முடிவாக கர்த்தருடைய வசனத்திற்கு நடுங்குகிறவர்களே, அவருடைய வார்த்தையை கேளுங்கள். என் நாமத்தின் நிமித்தம் உங்களை பகைத்து, உங்களை அப்புறப்படுத்துகிற உங்கள் சகோதரர், கர்த்தர் மகிமைப்படுவாராக என்கிறார்களே. அவர் உங்களுக்கு சந்தோஷம் உண்டாகும்படி காணப்படுவார், அவர்களோ வெட்கப்படுவார்கள். நிச்சயமாக திரு. ஆசேர், திரு. சுகிர்தராஜ், திரு. டேனியேல் பாலசிங், திருமதி. எமிலி ஒருநாள் துக்கப்பட்டு இலச்சை அடைவது நிச்சயம். அது உறுதி.

96. ஆனாலும் துரோகம் செய்து வருகிற அனைவரும் சுகித்திருக்கிறது என்ன? நீர் அவர்களை நாட்டினீர், வேர்பற்றி தேறிப்போனார்கள். கனியும் கொடுக்கிறார்கள். நீர் அவர்கள் வாய்க்கு சமீபமும், அவர்கள் உள்ளிருதயங்களுக்கோ தூரமுமாய்இருக்கிறீர். தியானியுங்கள் எரே 12 : 1,2

97. மித்துருக்களான இவர்கள் சத்துருகள் ஆயினரே. நானோ சத்தியத்தை சார்ந்து தேவசித்தம் செய்திடுவேன். கருணையினால் இதுவரை கைவிடாமலே கண்மணிபோல் என்னை காத்தாரே, கவலைகள் போக்கி கண்ணீர் துடைத்து எம்மை காத்தாரே - அல்லேலூயா. ஆத்துமாவே, என் முழு உள்ளமே உன் அற்புத தேவனையே ஸ்தோத்திரி. பொங்கிடுதே என் உள்ளத்திலே பேரன்பின் பெருவெள்ளமே. ஆமென்.

ஆகஸ்ட் / செப்டம்பர் 2008

கிறிஸ்துவின் அன்பில்
**சகோ. காலேப் யோசுவா**